


PRGI No. TNBIL/25/A1569

# வைகறையில் பேப்பர்பாய்

www.paperboy.biz

VAIGARAIYIL PAPERBOY




சென்னை மலர்: 01 இதழ்: 203 06.03.2026 வெள்ளிக்கிழமை | Chennai | Volume: 01 | Issue: 203 | Friday | pages 8 | Rs.5/-

DISTRIBUTED ACROSS TAMILNADU AND PUDUCHERRY

# மத்திய கிழக்கில் போர் பதற்றம் நீடிப்பு:
# ஈரானின் நீர்மூழ்கி கப்பல் உட்பட 17 போர்க் கப்பல்கள் அழிப்பு

**வாஷிங்டன், மார்ச்.6:**

ஈரான் மீது அமெரிக்கா நடத்தும் 'எபிக் ஃபியூரி' ஆபரேஷனில் ஈரான் கடற்படையில் இருந்த ஒரு நீர்மூழ்கி கப்பல் உட்பட 17 போர்க் கப்பல்களை அழித்துவிட்டதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

அணு ஆயுத தடுப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட ஈரான் மறுத்ததால், அதன் மீது அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் படைகள் கடந்த மாதம் 28-ம் தேதி போர் தொடுத்தன. பதில் தாக்குதலில் இறங்கிய ஈரான், அமெரிக்க ராணுவ முகாம்கள் இருக்கும் வளைகுடா நாடுகள் மீது தாக்குதல் நடத்துவதால் மத்திய கிழக்கில் போர்ப் பதற்றம் ஏற்பட்டுள்ளது.



இதுகுறித்து 'எபிக் ஃபியூரி' ஆபரேஷன் நடத்தும் அமெரிக்க ராணுவ கமாண்டர் அட்மிரல் பிராட் கூப்பர் நேற்று அளித்த பேட்டியில் கூறியதாவது:

ஆபரேஷன் எபிக் ஃபியூரியின் முதல் 100 மணி நேரத்தில் இதுவரை இல்லாத அளவில் மிகப் பெரிய தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

ஈரான் மீது 24 மணி நேரமும் தாக்குதல் நடத்தப்படுகிறது. இதுவரை சுமார் 2,000 இலக்குகளை தாக்கியுள்ளோம். ஈரானின் வான் பாதுகாப்பு மோசமான அளவில் பாதிப்படைந்துள்ளது. ஈரானின் நூற்றுக்கணக்கான ஏவுகணைகள் மற்றும் ட்ரோன்களை அழித்துள்ளோம்.

ஈரான் கடற்படையை ஒட்டுமொத்தமாக அழித்துவிட்டோம். ஈரான் கடற்படையில் ஒரு நீர்மூழ்கி கப்பல் உட்பட 17 போர்க்கப்பல்கள் இருந்தன. அனைத்தையும் மூழ்கடித்துவிட்டோம். சர்வதேச கப்பல் போக்குவரத்துக்கு தடையாக இருந்த ஈரானின் அனைத்து இடங்கள் மீதும் பி-2 குண்டு வீச்சு விமானங்கள், எப்-35 போர் விமானங்கள், டொமஹாக் ஏவுகணைகள் மூலம் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளன. இவ்வாறு பிராட் கூப்பர் கூறினார்.

ஈரான் கடற்படையில் ஐஆர்ஐஎஸ் மக்ரான் என்ற போர்க் கப்பல் இருந்தது. ஆயில் டேங்கர் கப்பலைப் போர்க் கப்பலாக மாற்றி ஈரான் பயன்படுத்தி வந்தது. ஹார்முஸ் ஜலசந்தி பகுதியில் முகாமிட்டிருந்த இந்த கப்பலை அமெரிக்க கடற்படை தாக்கி செயல் இழக்கச் செய்தது. ஈரான் கடற்படையில் பகேரி என்ற போர்க் கப்பல் கடந்தாண்டு சேர்க்கப்பட்டது. இதில் ட்ரோன்கள் மற்றும் ஹெலிகாப்டர்கள் இருந்தன. இதையும் அமெரிக்க கடற்படை தாக்கி மூழ்கடித்துவிட்டது.

ஜமரான் என்ற போர்க் கப்பலும் மூழ்கடிக்கப்பட்டது. இதே போல் ஈரான் கடற்படையில் இருந்த சாஹந்த், சபாலன், பேயந்தர், நக்தே ஆகிய போர்க் கப்பல்களையும் அமெரிக்க கடற்படை தாக்கி அழித்துள்ளது. இதேபோல் ஈரானின் நீர்மூழ்கி கப்பலை பந்தர் அப்பாஸ் பகுதியில் அமெரிக்கா மூழ்கடித்தது. தரேக் என்ற நீர்மூழ்கி உட்பட பல சிறிய நீர்மூழ்கி படகுகளையும் அமெரிக்கா மூழ்கடித்தது.

இறுதியாக இந்தியாவுடன் விசாகப்பட்டினத்தில் மிலன் 2026 கூட்டுப் பயிற்சியை முடித்துவிட்டு திரும்பிய ஈரானின் தேனா என்ற போர்க் கப்பலை இலங்கை அருகே, இந்தியப் பெருங்கடல் பகுதியில் அமெரிக்க நீர்மூழ்கி கப்பல் டார்பிடோ குண்டுகளை ஏவி நேற்று அதிகாலை மூழ்கடித்தது. இதில் 80 வீரர்கள் உயிரிழந்தனர். இங்கு இலங்கை கடற்படை மற்றும் விமானப்படை மீட்பு பணியை மேற்கொண்டது. ஈரான் கடற்படையில் மொத்தம் இருந்த 17 போர்க் கப்பல்களையும் அமெரிக்க கடற்படை அழித்துவிட்டதால் பின்னடைவு ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

எனினும், ட்ரோன்கள், ஏவுகணைகள் மூலம் ஈரானும் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறது. இதனால் வளைகுடா நாடுகளுடன் ஒட்டுமொத்த மத்திய கிழக்குப் பகுதிகளிலும் போர்ப் பதற்றம் நீடிக்கிறது.

## இன்றைய நாள்

வெள்ளிக்கிழமை
18-03-2026)
விசுவாவசு ஆண்டு, மாசி-22
பிறை: தேய்பிறை
திதி
திருதியை இரவு557வரை பிறகு சதுர்த்தி
நட்சத்திரம்:
அஸ்தம் காலை 10.26 பிறகு சித்திரை
யோகம்
அமிர்த/சித்தயோகம்
ராகுகாலம்
காலை 10.30-12:00 மணி
எமகண்டம்
பிற்பகல் 300-4.30 மணி
சூலம் - மேற்கு
நல்ல நேரம் :
காலை 6-7 மணி
மாலை 5-6 மணி

மேஷம் ..................... நலம்
ரிஷபம் ................. நன்மை
மிதுனம் ................ லாபம்
கடகம் ...................சாந்தம்
சிம்மம் ................ போட்டி
கன்னி ...................... நட்பு
துலாம் ..................ஆதரவு
விருச்சிகம் ............. உதவி
தனுசு .................. தேர்ச்சி
மகரம் ...................கவனம்
கும்பம் ......................புகழ்
மீனம் .................... நன்மை

## முதல்வர் பதவியில் இருந்து விலகுகிறார் நிதிஷ்?



**பாட்னா, மார்ச்.6:**

வரும் மாநிலங்களவை தேர்தலில் பிஹாரில் நிதிஷ் குமாரின் ஐக்கிய ஜனதா தளம் கட்சி 2 இடங்களில் வெற்றி பெறும் நிலையில் உள்ளது. இதில் ஒன்றில் மத்திய அமைச்சர் ராம் நாத் தாக்கூர் போட்டியிடுவது உறுதியாகி உள்ளது. மற்றொரு இடத்துக்கு இன்னும் வேட்பாளர் உறுதியாகவில்லை.

இந்நிலையில் நிதிஷ் குமார் முதல்வர் பதவியிலிருந்து விலகி, மாநிலங்களவை தேர்தலில் போட்டியிடுவார் எனவும் அவரது மகன் நிஷாந்த் குமார் துணை முதல்வராகப் பொறுப்பேற்பார் எனவும் பாஜகவை சேர்ந்த ஒருவர் அடுத்த முதல்வராக பதவியேற்பார் எனவும் அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இது தொடர்பாக பாஜக மற்றும் ஐக்கிய ஜனதா தள உயர்மட்ட தலைவர்கள் மத்தியில் ரகசிய கூட்டம் நடந்து வருகிறது.

கடந்த 2025ல் அவரது அரசுக்கு எதிரான அலை வீசுவதாக கூறப்பட்டபோது, பெண்களுக்கு நிதியுதவி, பள்ளி மாணவிகளுக்கு சைக்கிள், மது விலக்கு போன்ற திட்டங்களால் நிதிஷ் மீண்டும் ஆட்சிக்கு வந்தார். மாநிலங்களவை தேர்தலுக்கு வேட்பு மனு தாக்கல் செய்ய இன்று கடைசி நாளாகும். எனவே இத்தேர்தலில் நிதிஷ் குமார் போட்டியிடுகிறாரா என்பது தெரியவரும்.

### திமுக போராட்டத்தின் எதிரொலி

## திருச்சி ரயில்வே அலுவலக நுழைவு வாயிலின் இந்தி பெயர் நீக்கம்




**திருச்சி, மார்ச்.6:**

திமுகவினர் போராட்டத்தைத் தொடர்ந்து, திருச்சி கோட்ட ரயில்வே மேலாளர் அலுவலக நுழைவு வாயிலில் இருந்த 'கர்தவ்ய த்வார்' இந்தி பெயர் உடனடியாக நீக்கப்பட்டது.

திருச்சி ஜங்ஷன் ரயில் நிலையத்தில் உள்ள கோட்ட ரயில்வே மேலாளர் அலுவலகத்துக்கு அண்மையில் புதிதாக நுழைவு வளைவு கட்டப்பட்டது. இதில் 'கர்தவ்ய த்வார்' என இந்தி, ஆங்கிலம், தமிழ் ஆகியவற்றில் மொழி பெயர்ப்பு செய்யப்படாமல், இந்தியின் உச்சரிப்பிலேயே பெயர்கள் பொறிக்கப்பட்டிருந்தன.

இதற்கு முதல்வரும் திமுக தலைவருமான மு.க. ஸ்டாலின் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் கண்டனம் தெரிவித்திருந்தனர். மேலும், இந்தி திணிப்பு நடவடிக்கையை கண்டித்து அந்த அலுவலகம் முன் நேற்று ஏராளமான திமுகவினர் திரண்டு முற்றுகைப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதற்கு கட்சியின் திருச்சி மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி தலைமை வகித்தார். மேற்கு மாநகரச் செயலாளர் மேயர் மு.அன்பழகன் உள்ளிட்டோரும் இதில் பங்கேற்றனர்.

அப்போது, மத்திய அரசு இந்தியை திணிப்பதாகக் கூறி கண்டன கோஷங்களை எழுப்பியதுடன், அதில் இருந்த இந்தி எழுத்தை கருப்பு பெயின்ட் கொண்டு அழித்தனர். இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.

இதையடுத்து, இந்த நுழைவு வாயிலின் பெயரை 'கடமையின் நுழைவுவாயில்' என தமிழில் மாற்றியமைக்கப்படும் என திருச்சி ரயில்வே கோட்ட மேலாளர் அலுவலக மக்கள் தொடர்பு அலுவலர் தெரிவித்தார்.


மேலும், நுழைவு வாயிலில் இருந்த 'கர்தவ்ய த்வார்' என இந்தி, ஆங்கிலம், தமிழில் இருந்த எழுத்துகள் உடனடியாகஅகற்றப்பட்டன.

## தமிழ்நாட்டின் 6 மாநிலங்களவை உறுப்பினர்கள் வேட்பாளர்கள் அறிவிப்பு

**சென்னை, மார்ச்.6:**

தமிழ்நாட்டில் காலியாகவுள்ள 6 மாநிலங்களவை இடங்களுக்கு போட்டியிடுபவர்களின் முழுப் பட்டியல் வெளியாகியுள்ளது.

திமுகவில் இருந்து இருவர், அதிமுக, காங்கிரஸ், பாமக, தேமுதிக ஆகிய கட்சிகளில் இருந்து தலா ஒருவர் போட்டியின்றி தேர்வு செய்யப்பட வாய்ப்புள்ளது.



தமிழ்நாட்டிலிருந்து மாநிலங்களவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட 6 உறுப்பினர்களின் பதவிக்காலம் வரும் ஏப்ரல் 2 ஆம் தேதியுடன் நிறைவடைகிறது.

இதில், திமுக சார்பில் திருச்சி சிவா, என்.ஆர். இளங்கோ, அந்தியூர் செல்வராஜ், கனிமொழி சோமு, அதிமுகவின் தம்பிதுரை மற்றும் தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் ஜி.கே. வாசன் ஆகியோரின் பதவிக்காலம் முடிவடைகிறது.

இந்த நிலையில், தமிழ்நாடு உட்பட நாட்டில் 10 மாநிலங்களில் காலியாக உள்ள 37 மாநிலங்களவை இடங்களுக்கு மார்ச் 16 ஆம் தேதி தேர்தல் நடைபெறும் என தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

மாநிலங்களவை உறுப்பினர் பதவிக்கான வேட்புமனுத் தாக்கல் இன்றுடன் நிறைவடையவுள்ளது.

தமிழ்நாட்டில் காலியாகவுள்ள 6 இடங்களில் எம்.எல்.ஏ.க்கள் எண்ணிக்கையின் அடிப்படையில் 4 இடங்கள் திமுகவுக்கும் 2 இடங்கள் அதிமுகவுக்கும் கிடைக்கும்.திமுக கூட்டணியில் தேமுதிகவுக்கு ஒரு மாநிலங்களவை இடமும், காங்கிரஸுக்கு ஒரு மாநிலங்களவை இடமும் ஒதுக்கப்பட்டது. அதிமுக தரப்பில் பாமகவுக்கு ஒரு இடம் ஒதுக்கப்பட்டது.

இந்த நிலையில், அந்தந்தக் கட்சிகள் தங்களின் வேட்பாளர்களின் பெயர்களை அறிவித்துள்ளனர்.

திமுகவின் திருச்சி சிவா, பேராசிரியர் கான்ஸ்டன்டைன் ரவீந்திரன், அதிமுக தம்பிதுரை, காங்கிரஸ் கிறிஸ்டோபர் திலக், பாமக அன்புமணி, தேமுதிக எல்.கே. சுதீஷ் ஆகியோர் போட்டியிடுகின்றனர். தம்பிதுரை 5 முறை மக்களவை உறுப்பினராகவும், அதில், இருமுறை மக்களவை துணைத் தலைவராகவும், மத்திய அமைச்சராகவும் பதவி வகித்துள்ளார். 2019 மக்களவைத் தேர்தலில் காங்கிரஸின் ஜோதி மணியிடம் தோல்வியடைந்த நிலையில், 2020-ல் மாநிலங்களவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டார்.

திருச்சி சிவா தொடர்ந்து 6-வது முறையாக மாநிலங்களவைக்கு தேர்வாகவுள்ளார்.பாமகவின் அன்புமணி 3-வது முறையாக தேர்வாகவுள்ளார். இவர் மத்திய அமைச்சராக இருந்துள்ளார்.

பேராசிரியர் கான்ஸ்டன்டைன் ரவீந்திரன், கிறிஸ்டோபர் திலக், எல்.கே. சுதீஷ் ஆகியோர் முதல்முறையாக மாநிலங்களவைக்கு செல்லவுள்ளனர்.

## மத்திய கிழக்கில் போர்ப் பதற்றம்: இந்திய முதலீட்டாளர்களுக்கு ரூ.10 லட்சம் கோடி இழப்பு

**மும்பை, மார்ச்.6:**

மும்பை மற்றும் தேசியப் பங்குச் சந்தைகளில் நேற்று நடைபெற்ற வர்த்தகம் கடும் சரிவைச் சந்தித்தது. மத்திய கிழக்கு நாடுகளில் போர்ப் பதற்றம், சர்வதேச சந்தைகளில் நிலவி வரும் நிச்சயமற்ற சூழல் காரணமாக, மும்பை பங்குச் சந்தை குறியீட்டு எண்ணான சென்செக்ஸ் நேற்றைய வர்த்தகத்தின் போது 1,700 புள்ளிகளுக்கு மேல் சரிந்தது. இதன் காரணமாக நேற்று ஒரே நாளில் முதலீட்டாளர்களுக்கு சுமார் ரூ.10 லட்சம் கோடி அளவுக்கு இழப்பு ஏற்பட்டது.

ஈரான் - இஸ்ரேல் இடையே போர் தீவிரமடைந்து வருவதும், அதில் அமெரிக்காவின் தலையீடும் சர்வதேச முதலீட்டாளர்களைப் பெரும் கவலைக்கு உள்ளாக்கியுள்ளது. போர் சூழல் காரணமாக ஹார்முஸ் ஜலசந்தி வழியாக கப்பல் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளதால்,




கச்சா எண்ணெய் விலை கணிசமாக உயர்ந்துள்ளது. இது இந்தியாவின் பணவீக்கத்தை அதிகரிக்கும் என்ற அச்சம் எழுந்துள்ளது.

மேலும், டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு இதுவரை இல்லாத அளவாக 92-க்கும் கீழ் சரிந்ததும் சந்தையில் பலவீனமான சூழலை உருவாக்கியுள்ளது.

சென்செக்ஸ் 1,122.66 புள்ளிகள் சரிந்து 79,116.19-ல் நிலைபெற்றது. நிப்டி 385.20 புள்ளிகள் குறைந்து 24,480.50 புள்ளிகளில் நிலை கொண்டது. ஏழு மாதங்களுக்குப் பிறகு வர்த்தகத்தின் போது நிப்டி 24,400 என்ற நிலைக்குக் கீழ் சென்றது இதுவே முதல்முறையாகும்.



## பிரம்ம தீர்த்தகுளத்தில் தீர்த்தவாரி



**திருவண்ணாமலை, மார்ச் 06:** திருவண்ணாமலை அருள்மிகு அண்ணாமலையார் ஆலயத்தில் பிரம்ம தீர்த்த குளத்தில் சந்திர கிரகணத்தை முன்னிட்டு பிரம்ம தீர்த்தகுளத்தில் தீர்த்தவாரி நடைபெற்றது. **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை.**

## சாய்பாபா தியான ஆலயத்தில் சிறப்பு ஆரத்தி மற்றும் அலங்காரம்



மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி தென்பாதியில் அமைந்துள்ள ஸ்ரீசத்குரு சாய்பாபா தியான ஆலயத்தில் வியாழக்கிழமை சிறப்பு ஆரத்தி மற்றும் அலங்காரம் நடைபெற்றது.

## சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாக சுஷ்ருத் அரவிந்த் தர்மாதிகாரி நியமனம்!



**சென்னை,மார்ச் 06:** கேரள உயர் நீதிமன்ற நீதிபதி சுஷ்ருத் அரவிந்த் தர்மாதிகாரியை சென்னை உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக நியமித்து மத்திய சட்ட மற்றும் நீதி அமைச்சகம் அரசாணை வெளியிட்டுள்ளது.

சென்னை உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி மணிந்திர மோகன் ஸ்ரீவஸ்தவா இன்றோடு பணி ஓய்வு பெற்றநிலையில், முன்னதாகவே உச்ச நீதிமன்ற கொலீஜியம் இவரது பெயரைப் பரிந்துரைத்திருந்தது. இதுதொடர்பாக மத்திய சட்டத்துறை அமைச்சர் அர்ஜுன் ராம் மெக்வால் வெளியிட்டுள்ளப் பதிவில், 'இந்திய அரசியலமைப்புச் சட்டம் வழங்கியுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி, இந்தியத் தலைமை நீதிபதியுடன் கலந்தாலோசித்த பிறகு, இந்தியக் குடியரசுத் தலைவர், தற்போது கேரள உயர்நீதிமன்ற நீதிபதியாக உள்ள சுஷ்ருத் அரவிந்த் தர்மா அதிகாரியை, அவர் பொறுப்பேற்கும் தேதியிலிருந்து மெட்ராஸ் உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக நியமிப்பதில் மகிழ்ச்சி அடைகிறார். அவருக்கு எனது நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்' என தனது எக்ஸ் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

**யார் இவர்?**


மத்தியப் பிரதேசத்தைச் சேர்ந்த நீதிபதி தர்மாதிகாரி, ராய்ப்பூரைச் சேர்ந்தவர். நாக்பூர் பல்கலைக்கழகத்தில் வணிகம் மற்றும் சட்டத்தில் இளங்கலைப் பட்டம் பெற்றார். 1992 ஆம் ஆண்டு ஜபல்பூரில் உள்ள மத்தியப் பிரதேச உயர் நீதிமன்றத்தில் வழக்கறிஞராகப் பயிற்சியைத் தொடங்கிய அவர், 2000 முதல் 2015 வரை சுமார் 15 ஆண்டுகள் மத்திய அரசின் வழக்கறிஞராகப் பணியாற்றினார். வருமான வரித் துறை, இந்திய ரிசர்வ் வங்கி மற்றும் மத்திய கலால் துறை உள்ளிட்ட பல அரசு அமைப்புகள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களின் மூத்த நிலை ஆலோசகராகவும் அவர் பணியாற்றியுள்ளார்.


## மாசி மாதம் பௌர்ணமி பூஜை, ஸ்ரீவெக்காளியம்மன் வளைகாப்பு திருவிழா

**திருவண்ணாமலை, மார்ச் 06:** திருவண்ணாமலை மாவட்டம் கீழ்பென்னாத்தூர் வட்டம் கல்பூண்டி கிராமத்தில் அருள் பாலித்து வரும் ஸ்ரீ வெக்காளியம்மன் ஆலயத்தில் மாசி மாத பௌர்ணமி முன்னிட்டு ஸ்ரீலஸ்ரீ சந்துரு சாமி அவர்களால் சிறப்பு அபிஷேகங்கள், வண்ணமலர் மாலைகளால் அலங்காரங்கள், எலுமிச்சம்பழம் மாலைகளால் அலங்கரித்து, வண்ண பூக்களால் அர்ச்சனைகள் செய்து, சூலினிதுர்கா ஹோமம் வளர்த்து, வேத மந்திரங்கள் ஒலிக்க, கலசாபிஷேகம், தீர்த்தம் பிரசாதம் வழங்கப்பட்டது. ஸ்ரீவெக்காளியம்மனுக்கு சீர்வரிசை கொண்டு வந்தனர்.

பின்னர் ஸ்ரீவெக்காளியம்மனுக்கு வளைகாப்பு விழா தலைமை S. ராஜசேகர் ரெட்டியார் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் கல்பூண்டி அவர்களின் தலைமையில் நடைபெற்றது. மடி கட்டுதல் நிகழ்ச்சி, பூமி யாத்திரை, பிரசாதம், நெய்வேத்தியங்களுடன், பம்பை உடுக்கையுடன், மகா தீபாராதனை யும் நடைபெற்றது.

மேல் பள்ளிப்பட்டு செந்தமிழ் செம்மல் வாரியார் அடிப்பொடி வெ.கிருஷ்ணமூர்த்தி அவர்களின் குழுவினரால் சொற்பொழிவு நடைபெற்றது. மற்றும் வாழவச்சனூர் ஸ்ரீ அண்ணாமலையார் நாடக சபா நடத்தும் தெருக்கூத்து நடைபெற்றது.





ஸ்ரீ எல்லையம்மன் பம்பைக்குழு N. R. பேட்டை செஞ்சி முனுசாமி. மற்றும் ஸ்ரீலஸ்ரீ சந்துரு சாமி அவர்கள், கோவில் நிர்வாகிகள்,ஊர் பொதுமக்கள் கல்பூண்டி கிராமம். வெகு சிறப்பாக வளைகாப்பு திருவிழா நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் ஸ்ரீ வெக்காளி அம்மனை வேண்டி அருள் பெற்றனர். காலை 10 மணி முதல் இரவு 8 மணி வரை அன்னதானம் நடைபெற்றது.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## விருத்தாசலம் தொகுதியில் போட்டியிட கடலூர் மேற்கு மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளரும் வெலிங்டன் ஏரி நீர் பாசன சங்க தலைவர் பெரிய. இராஜராஜ சோழன் விருப்ப மனு

**கடலூர், மார்ச்.06:** விருத்தாசலம் சட்டசபை தொகுதியில் தி.மு.க., சார்பில் போட்டியிட கடலூர் மேற்கு மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளரும் வெலிங்டன் ஏரி நீர் பாசன சங்க தலைவர் பெரிய. இராஜராஜ சோழன் கட்சி அலுவலகத்தில் விருப்ப மனு கொடுத்தார்.

சட்டசபை தேர்தலில் தி.மு.க., சார்பில் போட்டியிடும் கட்சி நிர்வாகிகளிடமிருந்து, சென்னையில் உள்ள கட்சித் தலைமை அலுவலகத்தில் விருப்ப மனுக்கள் பெறும் நிகழ்ச்சி நடந்து வருகிறது.

இதில், விருத்தாசலம் தொகுதியில் தி.மு.க., சார்பில் போட்டியிடுவதற்கான விருப்ப மனுவை பெரிய. இராஜராஜ சோழன் விருப்பு மனு அளித்தார்.

இந்நிகழ்வில் திட்டக்குடி விருத்தாசலம் தொகுதிக்குட்பட்ட நிர்வாகிகள் தொண்டர்களுடன் அண்ணா அறிவாலயம் சென்ற கடலூர் மேற்கு மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளரும் வெலிங்டன் ஏரி நீர் பாசன சங்க தலைவர் பெரிய. இராஜராஜ சோழன் திமுக சார்பில் போட்டியிட விருப்ப மனு தாக்கல் செய்தார்.



அப்போது அவர் கூறியதாவது கலைஞர் விட்டு சென்ற பணிகளை கடமை தவறாமல் நிறைவேற்ற தயாராக இருக்கும் தலைவர் மு.க.ஸ்டாலின் கரத்தை வலுப்படுத்த விருத்தாசலம் தொகுதியில் தனக்கு உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட வாய்ப்பளித்தாள் தொகுதியின் வளர்ச்சிக்கு என்னென்ன திட்டங்கள் செயல் படுத்த வேண்டும் என்பதை ஆய்வு செய்து அதனை படிப்படியாக நிறைவேற்ற நடவடிக்கை எடுப்பேன் என இராஜராஜ சோழன் உறுதியளித்தார்.

## தமிழ்நாடு மகளிர் தொழில்முனைவோர் மேம்பாட்டு திட்டம் மானிய தொகைகளை மு.க.ஸ்டாலின் வழங்கினார்

**சென்னை, மார்ச் 06:** தமிழ்நாடு மகளிர் தொழில்முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், தகுதியுடைய பெண் தொழில்முனைவோர்கள், அதிகபட்சம் ரூ.10 லட்சம் வரை வங்கிக் கடன் பெற்று புதிய தயாரிப்பு, சேவை அல்லது வணிக நிறுவனங்களை தொடங்கவும், தொழில் விரிவாக்கத்திற்காக கடன் பெற விரும்பும் கலைஞர் கைவினைத் திட்ட பெண் பயனாளிகள் இத்திட்டத்தின் கீழ் மானியத்துடன் கூடிய கூடுதல் கடன் பெறவும், அரசு மானியமாக திட்டத்தின் மொத்த மதிப்பீட்டில் 25 சதவிகித மானியம் (அதிகபட்சம் ரூ.2 லட்சம் வரை) வழங்கப்படுகிறது. தமிழ்நாட்டில் வசிக்கும், 18 முதல் 55 வயது வரை உள்ள பெண்/மூன்றாம் பாலின தொழில் முனைவோர்கள் இத்திட்டத்தின் கீழ் விண்ணப்பிக்கலாம், மேலும், இத்திட்டத்தில் விண்ணப்பிக்க கல்வித்தகுதி மற்றும் வருமான வரம்பு ஏதும் இல்லை.

இத்திட்டத்தின் கீழ் இதுவரை 261.93 கோடி ரூபாய் மானிய மதிப்பிலான 22 ஆயிரத்து 356 விண்ணப்பங்கள்




இணைய வழியாக பெறப்பட்டு அவற்றில் ரூ.160.89 கோடி மானிய மதிப்பிலான 13 ஆயிரத்து 779 விண்ணப்பங்கள் வங்கிகளுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இதில், ரூ.27.01 கோடி மானியத்திற்கான 2,261 விண்ணப்பங்களுக்கு கடன் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மகளிர் தொழில்முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்து பயனாளிகளுக்கு மானியத்தொகைக்கான காசோலை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், தலைமைச் செயலாளர் முருகானந்தம், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் கூடுதல் தலைமைச் செயலாளர் அதுல் ஆனந்த், இயக்குநர் நிர்மல் ராஜ் கலந்து கொண்டனர்.

## எடப்பாடி பழனிசாமி முன்னிலையில் அதிமுகவில் இணைந்தார் நடிகை லதா

**சென்னை, மார்ச் 06:** அதிமுக வரும் சட்டமனற தேர்தலில் பாஜக மற்றும் அன்புமணி தலையிலான பாமகவுடன் கூட்டணி அமைத்து தேர்தலை சந்திக்கிறது. இந்நிலையில், பழம்பெரும் நடிகையான லதா இன்று அதிமுகவில் இணைந்துள்ளார்.

அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிச்சாமியை அவரது அலுவலகத்தில் நேரில் சந்தித்த லத அதிமுகவில் தன்னை இணைத்து கொண்டார்.

அப்போது நடிகை லதாவுக்கு உறுப்பினர் அட்டையை எடப்பாடி பழனிசாமி வழங்கினார்.



## மானாமதுரை திருப்புவனம் பகுதியில் கர்ப்பிணி பெண்கள் சமுதாய வளைகாப்பு விழா தமிழரசி எம்எல்ஏ தொடங்கி வைத்தார்





**மானாமதுரை மார்ச் 06:** சிவகங்கை மாவட்டம் மானாமதுரை திருப்புவனம் பகுதியில் கர்ப்பிணி பெண்களுக்கு சமுதாய வளைகாப்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில் மானாமதுரை சிவகங்கை ரோட்டில் உள்ள மஹாலில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கர்ப்பிணி பெண்கள் அனைவருக்கும் மானாமதுரை எம்எல்ஏ தமிழரசி தனது சொந்த செலவில் புடவைகள் வழங்கி கர்ப்பிணி பெண்களுக்கு மாலை வளையல் அணிவித்து மஞ்சள் குங்குமம் வழங்கினார்.

இந்நிகழ்வில் ஒன்றிய கழக நகர் கழக பேரூர் கழக கிளைக் கழக உள்ளாட்சிப் பிரதிநிதிகள் கழகத்தின் அனைத்து நிலை நிர்வாகிகள் சார்பு அணியினர் அரசு துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர். முன்னதாக திருப்புவனம் பகுதியில் சமுதாய வளைகாப்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

## காட்டு தீ பரவி ரூ. 12 லட்சம் மதிப்பிலான கோழி பண்ணை எரிந்து சாம்பலானது



**வேலூர், மார்ச் 06:** வேலூர் மாவட்டம், ஒடுகத்தூர் அடுத்த மராட்டிப்பாளையம் பகுதியை சேர்ந்தவர் ரேவதி (வயது 55), இவருக்கு அதே பகுதியில் விவசாய நிலம் உள்ளது. இந்த நிலத்தில் ஒரு பகுதியில் மாட்டு தீவனமும், அதன் அருகிலேயே 250 அடி நீளத்தில் தகரத்தால் ஆனா கோழி பண்ணை ஒன்றும் அமைத்துள்ளார்.

தற்போதுஇந்தபண்ணையில் கோழிகளை வளர்ப்பதற்காக முழு வேலைபாடுகளும் நடந்து வந்தது. கோழிகளை வளர்ப்பதற்காக ரூ.12 லட்சம் மதிப்பில் அனைத்து உபகரண பொருட்களும் வாங்கி வந்து பண்ணையில்பொருத்தப்பட்டு வந்தது. இந்த பண்ணை அருகிலேயே பரவமலை காப்புக்காடு உள்ளது. அந்த பகுதியில் மர்ம நபர் காட்டிற்கு தீ வைத்ததாக கூறப்படுகிறது.

அப்போது காடு பற்றி எரிந்தது. இந்த நிலையில் அங்கிருந்து தீப்பொறி பறந்து வந்து கோழிப் பண்ணை மீது விழுந்துள்ளது. இதில் தீ மளமளவென பண்ணை முழுவதும் பரவி அருகே உள்ள மாட்டு தீவன பயிர்களுக்கும் பரவியது. இதனை பார்த்த அங்கிருந்தவர்கள் உடனே தீயணைப்பு துறையினருக்கு தகவல் தெரிவித்தனர்.

தகவலறிந்த ஒடுகத்தூர் தீயணைப்பு நிலைய அலுவலர் (பொறுப்பு) பாஸ்கரன் தலைமையிலான வீரர்கள் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று சுமார் 2 மணி நேரம் போராடி தண்ணீரை பீய்ச்சி அடித்து தீயை கட்டுக்குள் கொண்டு வந்தனர். இருந்த போதிலும் கோழி பண்ணை முழுவதும் தீ பிடித்து எரிந்ததில் சுமார் ரூ.12 லட்சம் பொருட்கள் சாம்பலானது.

இதுகுறித்து, தகவலறிந்த வருவாய் துறையினர் மற்றும் வேப்பங்குப்பம் போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று பார்வையிட்டனர். சம்பவம் தொடர்பாக போலீசார் வழக்கு பதிந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

கோழி பண்ணை பற்றி சாம்பலான நிலையில் இதற்கு அரசு முறையில் உரிய நிவாரணம் வழங்க வேண்டும் என கோரிக்கைவிடுத்துள்ளனர். இந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பையும், சோகத்தையும் ஏற்படுத்தியது.

## திருநள்ளாறு சனிப்பெயர்ச்சியை ஒட்டி சிறப்பு ரெயில்கள் இயக்கம்





**புதுவை, மார்ச் 06:** புதுவை மாநிலம் காரைக்கால் பிராந்தியம் திருநள்ளாறில் உலக பிரசித்திப் பெற்ற தர்ப்பாரண்யேஸ்வரர் கோவில் உள்ளது. இந்த கோவிலில் சனீஸ்வர பகவான் கிழக்கு நோக்கி தனி சன்னதியில் அருள்பாலித்து வருகிறார். சனிக்கிழமைதோறும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் இங்கு வந்து தரிசனம் செய்வது வழக்கம்.

மேலும் சனீஸ்வர பகவான் கோவிலில் 2½ ஆண்டுகளுக்கு ஒரு முறை சனிப்பெயர்ச்சி விழா நடைபெறும். தற்போது இன்று (வெள்ளிக்கிழமை) சனிப்பெயர்ச்சி விழா நடைபெறுகிறது. இதையொட்டி காலை 8.24 மணிக்கு சனி பகவான் கும்ப ராசியில் இருந்து மீன ராசிக்கு இடம் பெயர்கிறார்.

இன்று சனிப்பெயர்ச்சி விழா நடைபெற இருப்பதை முன்னிட்டு திருநள்ளாறு சனீஸ்வர பகவான் கோவிலுக்கு அதிகளவில் பக்தர்கள் வருவார்கள் என்பதால் சிறப்பு ரெயில்கள் இயக்கப்படும் என்று தெற்கு ரெயில்வே அறிவித்துள்ளது.

அதன்படி மார்ச் 6, 7 தேதிகளில் விழுப்புரம் - நாகை இடையே சிறப்பு பயணிகள் ரயில்கள் இயக்கப்படுகிறது. காலை 9.10 மணிக்கு புறப்படும் சிறப்பு ரெயில் நண்பகல் 1.05 மணிக்கு நாகை சென்றடையும். மறுமார்க்கமாக பகல் 1.20 மணிக்கு புறப்படும் சிறப்பு ரெயில் மாலை 5.30 மணிக்கு விழுப்புரம் வந்தடையும்.






















ADIYOGI

REAL ESTATE WHOLESALE

VADACHENNAI CALL DRIVER



ஆதியோகி
ரியல் எஸ்டேட்
CMDA DTCP அப்ரூவல்
வீட்டுமனைகள் விற்பனை
_CONTACT_
8939228901










**WANTED**

Needed female staff to look after children, patients.

Contact

9150989424













**WANTED**

M/F லோடுமேன்,பிக்கர், ஹெல்பர், வர/மாத சம்பளம்: 450-700. உணவு இடம் free day/N8 shift

7540003588




**WANTED**

Retd, VRS, Home Makers, NRIs, Business Person

Contact

8248951872

# கவிதை அரங்கம்!






ஏதோ
ஒரு நினைவு
விழிகளை
நனைக்கும்
போதெல்லாம்
புன்னகையுடனேயே
கடந்துவிடுகின்றேன்
அந்நொடியை

பிடித்த
தனிமையும்
கொடுமையானது
உன்னுள்

தொலைந்ததிலிருந்து
யாரிடமும்
ஆறுதலை
எதிர்பார்க்காத
மனம்
உன் தோளை
மட்டுமே தேடுது
சாய்ந்து கொள்ள

நினைவும்
ஒரு அழகிய
இசை
அது நீயென்பதால்

# வாழ்க்கை தத்துவம்...




அனைவரையும் நேசி, சிலரை மட்டும் நம்பு, ஒருவரை பின்பற்று, ஆனால் ஒவ்வொருவரிடம் இருந்து கற்றுக்கொள்.

இருளைத் தூற்றுவதற்குப் பதில் அகலை ஏற்றுங்கள்.

வீரனைப் போரிலும், யோக்கியனை கடனிலும், மனைவியை வறுமையிலும், நண்பனை கஷ்டகாலத்திலும் அறிந்துகொள்ளலாம்.

பழைமைப் பற்றி ஒன்றுமே தெரியாமல் புதுமையைச் சிறப்பாகப் படைக்க முடியாது.

வாழப் பொருள் வேண்டும், வாழ்வதிலும் பொருள் வேண்டும்.

பணத்தின் உண்மையான மதிப்பு பிறரிடம் கடன் கேட்கும்போதுதான் தெரியும்.

சிக்கனமாக வாழும் ஏழை சீக்கிரமாக செல்வந்தனாவான்.

# நடைபாதை நட்சத்திரம்

" கடலூர் பைபாஸ் ரோட்டில் நடை பாதையில் தினமும் படுத்து உறங்கி பகலில் கிழக்கூத்தாடி வித்தை செய்து வயிறு பிழைக்கும் குடும்பம் வீராசாமி உடையது.

தினமும் அருகில் உள்ள பஸ்டாண்டு ரயில்வே ஸ்டேஷன் மற்றும் பொது இடங்களில் கயிற்றில் நடப்பது இரும்பு கம்பியில் புகுந்து வெளியில் வருவது தீ வட்டத்தில் பாய்ந்து வெளிப்படுவது என்று வித்தை காட்டுவது அவர்கள் குடும்பத்தின் தொழில். .

வீராசாமி அவர் மனைவி தனம் மகன் பட்டி அவன் மனைவி கலா மற்றும் பேரன் குமார் , பேத்தி சரசு இவர்களின் குடும்பம் .

நடை பாதை தான் இவர்கள் வீடு வாசல் வசந்த மாளிகை இப்படி முப்பது ஆண்டுகள் கடந்து விட்டது வாழ்க்கை .

வாழும் வாழ்க்கையை நொந்து கொண்டாலும் சில நாள் வயிறு நிறையும் பல நாள் பட்டினி தான் பதில். இருந்தும் வேறு தொழிலோ படிப்போ எதுவும் தெரியாது முயற்சி செய்ய நேரமோ எண்ணமோ இல்லை .

பட்டியின் மகன் குமார் கொஞ்சம் மாறுபட்டவன் . தினமும் தொழில் முடிந்து ஓய்வு நேரத்தில் பழைய பேப்பர் நோட்டுகளில் கிறுக்குவான் அழகாக படம் வரைவான் .

நெடுநாளாக பார்த்து வந்த ஒரு பெரியவர் ராஜன் குமாரை அழைத்து தினமும் மாலையில் கல்வி அறிவு கொடுத்தார் . அவன் ஆர்வம் ஈடுபாடு பார்த்து அவனை ஒரு பள்ளியில் சேர்த்து விட்டார் .

பள்ளி முடிந்து கல்லூரிக்கும் அவர் உதவி செய்தார் . அவனின் புத்தக மூட்டை கல்வி சம்மந்தமான எல்லாம் ராஜன் வீட்டில் தான் . அவனுக்கு படுக்க படிக்க சாப்பிட உணவு எல்லாம் அவர் தான்.

யாரும் இல்லாத ராஜன் அவர்களுக்கு முழுப் பிடிப்பு குமார் தான் . ராஜன் வயது எழுபது தாண்டியது .

குமார் நன்கு படித்து வேலைக்கு சென்றான். அதற்குள் ராஜன் அவன் அரசாங்க வேலைக்கு செல்ல பயிற்சி கொடுத்து தேர்வு எழுத உதவினார் .

குமார் விரைவில் தேர்வு பெற்று அரசாங்க வேலையில் அமர்ந்தான். ராஜன் தன் சொத்துக்களை விற்று குமார் குடும்பத்திற்கு ஒரு வீடு கட்டிக் கொடுத்து சின்ன நடை பாதை சிற்றுண்டி தள்ளுக் கடை ஆரம்பித்து கொடுத்தார் .

தன் சொந்த முயற்சியில் தன் உறவினர் ஒருவரின் மகள் ராணியை குமாருக்கு மணம் முடித்து வைத்தார்.

குமார் - ராணி தம்பதிக்கு ராகுல் என்கிற மகன் பிறந்தான். ராஜன் ராகுலை குமாரை விட அதிகம் கவனம் செலுத்தி படிக்க வைத்தார் .

ராஜன் உடல் மோசமாகி படுகையில் விழுந்தார். வீராசாமி குடும்பமும் குமார் குடும்பமும் நன்கு கவனித்து ராஜன் இறுதி காலத்தை ஆசையை நிறைவேற்றி வைத்தனர்.

வீராசாமி குடும்பம் நன்கு தலைநிமிர ஆரம்பித்தது . சரசுக்கு நல்ல இடத்தில் திருமணத்தை முடித்தார் பட்டி .

ராஜன் இறந்ததும் அவர் நினைவாக குமார் மற்றும் வீராசாமி குடும்பம் வருடத்திற்கு இரண்டு நடை பாதை பிள்ளைகளை தத்து எடுத்து கல்வி வசதி செய்து கொடுத்தனர் .

நடை பாதையில் இருந்து உயர்ந்த குமார் தன் மகன் ராகுலை கலெக்டர் ஆக்கி அழகு பார்த்தான். நடைபாதை நட்சத்திரமாக உருவெடுத்த ராகுல் பிற்காலத்தில் தன் பூர்வீகத்தை பற்றி தெரிந்து கொண்டு ஏழை எளியோருக்கு அடிப்படை வசதி உணவு உடை தங்கும் இடம் கல்வி கற்க வழி செய்தான் .

ஒரு நடைபாதை குமார் கல்வி அறிவு பெற்று உயர்ந்திட பல ஆயிரம் நடை பாதை குடும்பம் விடியல் தேட வழி செய்தான் ராகுல் .

எல்லாவற்றிருக்கும் காரணமான தன் தாத்தா ராஜன் போட்டோவை தன் வீட்டிலும் அலுவலத்திலும் மாட்டி வைத்து தினமும் மானசீகமாக பூஜை செய்தான் ராகுல் .... "

**ஆர். சீதாராமன்.**
**- சீர்காழி.**

# சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!



*கணவன்: ஒருவேளை நான் இறந்துட்டா, நீ வேற கல்யாணம் பண்ணிப்பியா?*

*மனைவி: ச்சச்ச.. நான் என் தங்கச்சி கூட வாழ்ந்துடுவேன். ஒருவேளை நான் இறந்துட்டால் நீங்க வேற கல்யாணம் பண்ணிப்பீங்களா?*

*கணவன்: நானும் உன் தங்கச்சி கூட வாழுவேன்.*

*மனைவி: !!!*



# தினம் ஒரு சமையல்



## தினை இனிப்பு கஞ்சி

தேவையான பொருட்கள்:

*தினை - 1கப்*
*நாட்டு சர்க்கரை - 5 ஸ்பூன்*
*தேங்காய்துருவல் -2ஸ்பூன்*
*பால் -,1 கப்*
*நல்லெண்ணெய் - 3 ஸ்பூன்*
*தண்ணீர் - 4 கப்*

செய்முறை:




முதலில்தினையை சுத்தம் செய்து 1 மணி நேரம் தண்ணீரில் ஊறவைக்கவும். பின் பானையில் 4-பங்கு தண்ணீர் விட்டு வேகவிடுங்கள்.பாலை காய்ச்சி வைத்துக்கொள்ளுங்கள்.

பின் வேறுபாத்திரத்தில் வேகவைத்த தினை,நாட்டுச்சர்க்கரை, சேர்த்து நன்கு கலந்துவிடுங்கள்.தேங்காய் துருவல்சேர்க்கவும்.

பின் பால் சேர்த்து நன்கு கலந்துவிடுங்கள்.ஒன்று போல் சேர்ந்துவந்ததும் உடனே கீழே இறக்கிவிடுங்கள்.உடனே சாப்பிடலாம்.சத்தானது.

நல்லெண்ணெய் பிடித்தவர்கள் மேலே தினை கஞ்சி மேல் ஊற்றி சாப்பிடலாம்.சுவையான தினைஇனிப்பு கஞ்சி ரெடி. குழந்தைகள்முதல் பெரியவர்கள்வரை சுவைத்து மகிழுங்கள்.

# முடக்கொத்தான் பயன்கள்



வைட்டமின்கள் மற்றும் தாதுப்பொருட்கள்: பொதுவாக பச்சை இலைக் காய்கறிகளில் வைட்டமின் ஏ, வைட்டமின் சி, இரும்புச்சத்து, கால்சியம் போன்ற வைட்டமின்கள் மற்றும் தாதுப்பொருட்கள் அதிகம் இருக்கும். இவை ஒட்டுமொத்த ஆரோக்கியத்திற்கும் நல்வாழ்வுக்கும் உதவும்.

நார்ச்சத்து: முடக்கு அறுத்தான் கீரையில் நார்ச்சத்து இருக்கலாம். இது செரிமானத்திற்கு உதவிபுரிந்து குடல் ஆரோக்கியத்தை மேம்படுத்தும்.

ஆன்டி ஆக்சிடன்ட் எதிர்ப்பொருட்கள்: சில பச்சை இலைக் காய்கறிகளில் ஆக்ஸிஜனேற்ற எதிர்ப்பொருட்கள் அதிகம் உள்ளன. இவை செல் சேதத்தை எதிர்த்து போராடவும் நாள்பட்ட நோய்களின் அபாயத்தைக் குறைக்கவும் உதவும்.

பாரம்பரிய பயன்பாடுகள்:

முடக்கு அறுத்தான் கீரை தமிழ் பாரம்பரிய உணவு முறையில் பயன்படுத்தப்படுகிறது. இதற்கு பல்வேறு நன்மைகள் இருப்பதாகக் கருதப்படலாம், ஆனால் இதற்கு அறிவியல் ஆதாரங்கள் தேவை

முடக்கத்தான் கீரை பயன்கள் பின்வரும் நிலைகளுக்கும் பயன்படுத்தலாம்:

1. காயங்கள் ஆXறுதல்

2. செரிமான பிரச்சனைகள்

3. நோயெதிர்ப்பு சக்தி அதிகரிப்பு (பாரம்பரிய நம்பிக்கை)

4. முடக்கறுத்தான் முடக்குவாதத்தை அறுக்கும் மூலிகை முடக்கக்கூடிய வியாதிகளை அறுக்கக்கூடிய மூலிகை என்பதால் தான் இது முடக்கறுத்தான் என்று கூறப்படுகிறது.

5. முடக்குவாதம், கீல்வாயு போன்ற நோய்களுக்கு மிகச் சிறந்த மூலிகையாக முடக்கத்தான் உள்ளது.

6. மூட்டு வலி, இடுப்பு வலியினை சரி செய்து அவர்களை நன்றாக நடக்க வைக்கும் மூலிகையாக உள்ளது முடக்கறுத்தான்.

7. முடக்கத்தான் பொடி+ முருங்கை மர பட்டை+ பூண்டு ஆகியவற்றை கசாயம் செய்து குடித்து வர மூட்டுவலிக்கு சிறந்த மருந்தாக உள்ளது.

8. தினமும் இதனை எடுத்துக் கொண்டால் பெண்களின் பைப்ராய்ட் கட்டி,மாதவிடாயின் போது ஏற்படக்கூடிய வயிற்று வலி ஆகியவற்றிற்கு முடக்கத்தான் சிறந்த மருந்தாக உள்ளது.

# 6 நாட்களில் தாய் கிழவி படம் செய்துள்ள வசூல்.. எவ்வளவு தெரியுமா?



வித்தியாசமான கதைக்களத்தில் உருவாகி வெளிவந்த தாய் கிழவி படத்திற்கு கடந்த 6 நாட்களாக ரசிகர்கள் மத்தியில் அமோக வரவேற்பு கிடைத்துள்ளது.

இந்நிலையில், முதல் நாளில் இருந்து பாக்ஸ் ஆபிஸில் பட்டையை கிளப்பி வரும் தாய் கிழவி படம் உலகளவில் 6 நாட்களில் செய்துள்ள வசூல் குறித்து தகவல் வெளியாகியுள்ளது.

அறிமுக இயக்குநர் சிவகுமார் முருகேசன் இயக்கத்தில் ராதிகா சரத்குமார் நடிப்பில் உருவாகி கடந்த வாரம் திரைக்கு வந்த படம் தாய் கிழவி.

இப்படத்தை முன்னணி ஹீரோவான சிவகார்த்திகேயன் தயாரிக்க நிவாஸ் கே. பிரசன்னா இசையமைத்திருந்தார்.

அதன்படி, 6 நாட்களில் உலகளவில் இப்படம் ரூ. 33.5 கோடி வசூல் செய்துள்ளது. விரைவில் இப்படம் ரூ. 50 கோடியை ஈசியாக கடந்துவிடும் என திரை வட்டாரத்தில் கூறப்படுகிறது.



சினிமா

சீரியல் நடிகை ஷபானா தனது கணவர் ஆர்யன் உடன் தாய்லாந்தின் புகெட் தீவுக்கு ட்ரிப் சென்று இருக்கிறார். செம்பருத்தி சீரியல் மூலமாக பாப்புலர் ஆகி மற்ற பல தொடர்களிலும் நடித்து இருக்கும் நடிகை ஷபானா, பாக்கியலட்சுமி சீரியல் புகழ் நடிகர் ஆர்யனை காதல் திருமணம் செய்துகொண்டார். தாய்லாந்து ட்ரிப்பில் அவர்கள் எடுத்துக்கொண்ட புகைப்படங்களை இன்ஸ்டாவில் வெளியிட்டு இருக்கின்றனர். ஷார்ட் ஆன ட்ரெண்டி உடையில் ஷபானா அங்கே வலம் வந்திருக்கிறார்.

# சிறகடிக்க ஆசை மனோஜ் சினிமாவில் ஹீரோவாக நடிக்கும் வசூல் மன்னன் படம்.. எப்போது ரிலீஸ் தெரியுமா



சின்னத்திரையில் வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கும் சிறகடிக்க ஆசை சீரியலை பற்றி தெரியாதவர்கள் தமிழ்நாட்டிலேயே இல்லை என்றுதான் சொல்லவேண்டும்.

விறுவிறுப்பாக செல்லும் இந்த சீரியலில் மனோஜ் என்கிற கதாபாத்திரம் கண்டிப்பாக அனைவரின் கவனத்தையும் ஈர்த்திருக்கும். இந்த கதாபாத்திரத்தில் நடித்து வருபவர் நடிகர் ஸ்ரீதேவா.

சிறகடிக்க ஆசை சீரியலில் மனோஜ் ரோலில் நடித்து பிரபலமான இவர் இன்று வெள்ளித்திரையில் ஹீரோவாக கால் பதித்துள்ளார். ஆம், ஸ்ரீதேவா நடிப்பில் உருவாகியுள்ள புதிய திரைப்படம் வசூல் மன்னன்.

இந்த படத்தை வேல் முருகேசன் என்பவர் இயக்கியுள்ளார். இப்படத்தில் ஸ்ரீதேவாவுடன் இணைந்து வேல ராமமூர்த்தி, சரவண சுபையா ஆகியோர் நடித்துள்ளனர்.

இந்த நிலையில், இவர் நடிப்பில் உருவாகியுள்ள வசூல் மன்னன் திரைப்படம் நாளை (மார்ச் 6) திரையரங்கில் வெளியாகிறது. இப்படத்தின் படப்பிடிப்பு தளத்தில் எடுத்துக்கொண்ட புகைப்படங்களை ஸ்ரீதேவா தனது இன்ஸ்டாகிராமில் பதிவு செய்துள்ளார். ரசிகர்கள் தங்களது வாழ்த்துக்களை அவருக்கு தெரிவித்து வருகிறார்கள்.

இதோ..

# 1500 வருடங்களுக்கு முன்பு ஒரு பக்தனுக்காக நகர்ந்த கொடிமரம்!

நெல்லை மாவட்டத்தில் உள்ள புகழ்பெற்ற வைணவ தலமான இக்கோவில் 108 திவ்ய தேசங்களில் ஒன்றாக கருதப்படுகிறது. அழகிய நம்பிராயர் மூலவராகவும் குருங்குடி வள்ளி நாச்சியார் தாயாராகவும் அருள் பாலிக்கிறார்கள். ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பட்டது திருக்குறுங்குடி நம்பி கோவில். மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரத்தில் திருக்குறுங்குடி என்ற ஊரில் அமைந்துள்ளது.

இது திருமழிசை ஆழ்வார், நம்மாழ்வார், பெரிய ஆழ்வார், திருமங்கையாழ்வார் ஆகியோரால் பாடல் பெற்ற தலமாகும். இங்கு மகாவிஷ்ணு லட்சுமி உடன் வராக வடிவத்தில் தங்கி இருந்ததால் குறுங்குடி எனப்பட்டது.

நம்பாடுவான் என்ற பாணர் குலத்தை சார்ந்த விஷ்ணு பக்தர் மகேந்திர கிரி மலையில் வசித்து வந்தார். அவர் திருக்குறுங்குடியில் உள்ள நம்பியை தரிசிக்க கீழே இறங்கி வந்தார். அப்போது அந்த காட்டுப் பகுதியில் இருந்த பிரம்ம ராட்சசன் என்ற அரக்கன் நம்பாடுவானை பிடித்து வைத்து தன் பசியை போக்க அவரை உணவாக புசிக்க எண்ணினான். நம்பாடுவான் அந்த அரக்கனிடம் நான் நம்பிப் பெருமாளை தரிசித்துவிட்டு பிறகு உனக்கு இரையாகிறேன் என்றார். பின்னர் நம்பாடுவான் நம்பியை தரிசிக்க சென்றார்.. கோவில் முகப்பில் உள்ள கொடிமரம் அவரை உள்ளே விடாதபடி மறித்தது. உடனே நம்பாடுவான் பக்தி பாடல்களை பாடவும் கொடிமரம் நகர்ந்து நம்பிப் பெருமாளை தரிசிக்க உதவி செய்தது. மீண்டும் பிரம்ம ராட்சசன் அரக்கனை சந்திக்க நம்பாடுவான் சென்றார்.





போகும் வழியில் ஒரு பிராமணர் நம்பாடுவானிடம் ஒரு கனியை கொடுத்தார். அந்தக் கனியை அவர் அந்த அரக்கனிடம் கொடுத்தார். அரக்கன் அந்தக் கனியை சாப்பிட்டதும் அவனது பசி அடங்கி விட்டது. அரக்கன் நம்பாடுவானை விடுவித்தார். பிராமணர் வடிவில் வந்தது நம்பி என அறிந்து கொண்டார் அவர். இந்த கோவில் 1500 ஆண்டுகளுக்கு மேல் பழமையானது. இந்த பெருமாளை வழிபட்டு வந்தால் நாம் நினைத்த காரியம் நடைபெறும் என்பது அசைக்க முடியாத நம்பிக்கையாகும்.



**-சிவ.முத்து லட்சுமணன்**
போச்சம்பள்ளி

தினம் ஒரு தலைவர்கள்

# அகமதுல்லா ஷா வரலாறு

பைசாபாத்தின் மௌல்வி என்று அழைக்கப்படும் அகமதுல்லா ஷா (1787 - 5 ஜூன் 1858) , ஒரு பிரபலமான சுதந்திரப் போராட்ட வீரர் மற்றும் 1857 ஆம் ஆண்டு இந்தியக் கிளர்ச்சியின் தலைவராக இருந்தார். மௌலவி அகமதுல்லா ஷா அவத் பிராந்தியத்தில் கிளர்ச்சியின் கலங்கரை விளக்கமாக அறியப்பட்டார். ஜார்ஜ் புரூஸ் மல்லேசன் மற்றும் தாமஸ் சீடன் போன்ற பிரிட்டிஷ் அதிகாரிகள் அகமதுல்லாவின் தைரியம், வீரம், தனிப்பட்ட மற்றும் நிறுவனத் திறன்களைப் பற்றி குறிப்பிட்டுள்ளனர். ஜிபி மல்லேசன் 1857 ஆம் ஆண்டு இந்தியக் கிளர்ச்சியை உள்ளடக்கிய 6 தொகுதிகளில் எழுதப்பட்ட இந்தியக் கலகத்தின் வரலாறு என்ற புத்தகத்தில் அகமதுல்லாவை மீண்டும் மீண்டும் குறிப்பிடுகிறார். தாமஸ் சீடன் அகமதுல்லா ஷாவை இவ்வாறு விவரிக்கிறார்:

சிறந்த திறமைகள், அசாத்திய துணிச்சல், கடுமையான மன உறுதி, மற்றும் கிளர்ச்சியாளர்களில் மிகச் சிறந்த சிப்பாய்.

— தாமஸ் சீடன்,

ஒரு முஸ்லிம் மதத்தை பின்பற்றுபவராக இருந்த அவர், பைசாபாத்தின் மத ஒற்றுமை மற்றும் கங்கா-ஜமுனா கலாச்சாரத்தின் சுருக்கமாகவும் இருந்தார் . 1857 ஆம் ஆண்டு கிளர்ச்சியில், நானா சாஹிப் மற்றும் கான் பகதூர் கான் போன்ற அரச குடும்பத்தினர் அகமதுல்லாவுடன் இணைந்து போராடினர்.

ஆங்கிலேயர்களால் மௌல்வியை உயிருடன் பிடிக்கவே முடியவில்லை. அவரைப் பிடிக்க 50,000 வெள்ளி நாணயங்கள் விலை அறிவிக்கப்பட்டது. இறுதியாக போவாயன் மன்னர் ராஜா ஜகன்னாத் சிங் மௌல்வியைக் கொன்று, அவரது தலையை துண்டித்து, அவரது தலையை ஆங்கிலேயர்களிடம் ஒப்படைத்தார், இதற்காக ராஜா ஜகன்னாதிற்கு அறிவிக்கப்பட்ட பரிசு வழங்கப்பட்டது. அடுத்த நாள், மௌல்வியின் தலை கோத்வாலியில் தொங்கவிடப்பட்டது காணப்பட்டது.



## குடும்பம்

அஹ்மதுல்லாவின் குடும்பம் ஹர்தோய் மாவட்டத்தில் உள்ள கோபமாவ் கிராமத்தின் பூர்வீக குடியிருப்பாளர் . அவரது தந்தை குலாம் உசேன் கான் சுல்தான் ஹைதர் அலியின் மைசூர் படையில் ஒரு இராணுவத் தளபதியாக இருந்தார் . ஜிபி மல்லேசன் மௌல்வியின் ஆளுமையை பின்வருமாறு விவரிக்கிறார்:

அந்த மௌல்வி ஒரு குறிப்பிடத்தக்க மனிதர். அவரது பெயர் அஹ்மத்-உல்லா மற்றும் அவரது சொந்த ஊர் அவுத்தில் உள்ள பைசாபாத். நேரில் பார்த்தால், அவர் உயரமானவர், ஒல்லியானவர் மற்றும் தசைநார் கொண்டவர், பெரிய ஆழமான கண்கள், வண்டு புருவங்கள், உயர்ந்த நீர்வாழ் மூக்கு மற்றும் லாந்தர் தாடைகள் கொண்டவர்.
மௌல்வி ஒரு சுன்னி முஸ்லிம் மற்றும் ஒரு வசதியான குடும்பத்தைச் சேர்ந்தவர். அவருக்கு ஆங்கிலத்தில் நல்ல தேர்ச்சி இருந்தது. பாரம்பரிய இஸ்லாமியக் கல்வியைப் பெற்ற பிறகு , மௌல்விக்கு பொதுநலப் பயிற்சியும் வழங்கப்பட்டது. அவர் இங்கிலாந்து , ரஷ்யா , ஈரான் , ஈராக் , மெக்கா மற்றும் மதீனா ஆகிய நாடுகளுக்குச் சென்று ஹஜ்ஜையும் செய்தார்.
1857 கிளர்ச்சிக்கு முன்பு ஆயுதமேந்திய கிளர்ச்சியின் வெற்றிக்கு, மக்களின் ஒத்துழைப்பு மிகவும் முக்கியமானது என்று மௌல்வி அகமதுல்லா ஷா நம்பினார். அவர் டெல்லி , மீரட் , பாட்னா , கல்கத்தா மற்றும் பல இடங்களுக்குச் சென்று சுதந்திர விதைகளை விதைத்தார். மௌல்வி மற்றும் ஃபஸ்ல்-இ-ஹக் கைராபாதி ஆகியோரும் பிரிட்டன்களுக்கு எதிராக ஜிஹாத் அறிவித்தனர் . 1857 ஆம் ஆண்டு கிளர்ச்சி வெடிப்பதற்கு முன்பே, ஆங்கிலேயர்களுக்கு எதிராக ஜிஹாத் தேவைக்காக திட்டமிடப்பட்ட முறையில் ஃபதே இஸ்லாம் என்ற துண்டுப்பிரசுரத்தையும் அவர் எழுதினார் .

ஜிபி மல்லேசன் கூற்றுப்படி, "1857 கிளர்ச்சியின் சதித்திட்டத்திற்குப் பின்னால், மௌலவியின் மூளையும் முயற்சிகளும் குறிப்பிடத்தக்கவை என்பதில் சந்தேகமில்லை. பிரச்சாரங்களின் போது ரொட்டி விநியோகம், சப்பாத்தி இயக்கம் , உண்மையில் அவரது மூளையில் பிறந்தது."

பாட்னாவில் கைது ஜிபி மல்லேசன் கூற்றுப்படி, மௌல்வி பாட்னாவில் இருந்தபோது, திடீரென எந்த முன்னறிவிப்பும் அல்லது தகவலும் இல்லாமல், பஞ்சாபிலிருந்து ஒரு அதிகாரி பாட்னாவிற்கு வந்தார் . ரஷ்மி குமாரி எழுதிய அகமதுல்லா ஷா பற்றிய புத்தகத்தில் அவர் லெப்டினன்ட் தர்ஸ்பெர்ன் என்று குறிப்பிடப்படுகிறார். தனது சட்டைப் பையில் ஒரு வாரண்டுடன், பாட்னாவில் உள்ள சாதிக்பூருக்குள் நுழைந்தார் . அவர் அகமதுல்லா ஷாவின் வீட்டிற்குள் நுழைந்து, காவல்துறையின் உதவியுடன் அவரைக் கைது செய்தார்.
பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிரான கிளர்ச்சி மற்றும் சதித்திட்டக் குற்றச்சாட்டில் மௌல்விக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது . பின்னர் தண்டனை ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டது.
1857 மே 10 அன்று கிளர்ச்சி வெடித்த பிறகு, அசாம்கர் , பனாரஸ் மற்றும் ஜான்பூரிலிருந்து கிளர்ச்சி சிப்பாய்கள் ஜூன் 7 அன்று பாட்னாவை அடைந்தனர். ஏற்கனவே தப்பி ஓடிய ஆங்கில அதிகாரிகளின் பங்களாக்களைத் தாக்கினர். நகரத்தை கிளர்ச்சியாளர்கள் கைப்பற்றியவுடன், அவர்கள் அரசாங்க கருவூலத்தைக் கைப்பற்றினர். அவர்கள் சிறைச்சாலையை நோக்கிச் சென்று மௌல்வியையும் மற்ற கைதிகளையும் விடுவித்தனர். மான் சிங்கை பாட்னாவின் ராஜாவாக அறிவித்த பிறகு , மௌல்வி அகமதுல்லா அவத் சென்றார் .
கிளர்ச்சியாளர்களின் ஒரு படைப்பிரிவுக்கும் ஜெனரல் பிரிகேடியர் ஜோன்ஸின் படைப்பிரிவுக்கும் இடையே 1858 மே 15 அன்று கடுமையான போர் நடந்தது. இரு தரப்பினரும் பெரும் இழப்புகளைச் சந்திக்க வேண்டியிருந்தது, ஆனால் கிளர்ச்சியாளர்கள் ஷாஜஹான்பூரைக் கைப்பற்ற முடிந்தது. காலின் மே 20 அன்று ஷாஜஹான்பூரை அடைந்து, அனைத்துப் பக்கங்களிலிருந்தும் தாக்கினார். இந்தப் போர் இரவு முழுவதும் தொடர்ந்தது. மௌலவியும் நானா சாஹிப்பும் ஷாஜஹான்பூரை விட்டு வெளியேறினர். காலின் தானே மௌலவியைப் பின்தொடர்ந்தார், ஆனால் அவரைப் பிடிக்க முடியவில்லை என்று கூறப்படுகிறது. ஷாஜஹான்பூரின் வீழ்ச்சிக்குப் பிறகு, மௌலவி ஷாஜஹான்பூருக்கு வடக்கே 18 மைல் தொலைவில் உள்ள போவயனுக்குப் புறப்பட்டார்.

## இறப்பு

ஆங்கிலேயர்களால் மௌல்வியை உயிருடன் பிடிக்கவே முடியவில்லை. மௌல்வியைப் பிடிக்க 50,000 வெள்ளித் துண்டுகளை பரிசாக அறிவித்தனர். பவாயன் மன்னர் ராஜா ஜெகன்னாத் சிங்கை ஆங்கிலேயர்களுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்யத் தூண்ட மௌல்வி அகமதுல்லா ஷா விரும்பினார், ஆனால் மௌல்வியின் விருப்பத்திற்கு மௌல்வி அடிபணியவில்லை. மௌல்வி தனது போர் யானையின் மீது தனது அரண்மனையின் வாயிலை அடைந்தபோது , மன்னர் பீரங்கி குண்டு வீசி அவரைத் தாக்கினார் . இதனால் மௌல்வி தனது யானையிலிருந்து கீழே விழுந்து இறந்தார். ஜிபி மல்லேசன் அவரது மரணத்தை இவ்வாறு விவரிக்கிறார்:

இவ்வாறு பைசாபாத்தின் மௌல்வி அகமதுல்லா ஷா இறந்தார். ஒரு தேசபக்தர் தனது சொந்த நாட்டிற்காக சுதந்திரத்திற்காக சதி செய்து போராடி, தவறாக அழிக்கப்பட்ட ஒரு மனிதராக இருந்தால், நிச்சயமாக, மௌல்வி ஒரு உண்மையான தேசபக்தர் ஆவார்.

— ஜிபி மல்லேசன்

போவாயன் மன்னர் ராஜா ஜகன்னாத் சிங்கின் சகோதரர் குன்வர் பல்தியோ சிங், மௌல்வி அகமதுல்லா ஷாவைக் கொன்று, அவரது தலையை துண்டித்து, அதை நீதிபதியிடம் ஒப்படைத்ததாக அறியப்படுகிறது . அவருக்கு அறிவிக்கப்பட்ட பரிசு வழங்கப்பட்டது மற்றும் ஆங்கிலேயர்களின் ஆதரவைப் பெற்றார். மௌல்வியின் தலை மறுநாள் கோட்வாலியில் தூக்கிலிடப்பட்டது.
1857 ஆம் ஆண்டின் மற்றொரு புரட்சியாளரான ஃபஸ்ல்-இ-ஹக் கைராபாதி, மௌல்வியின் மரணத்தைக் கண்டார்.

# கேரளத்தில் மலையாளம் மட்டுமே அலுவல்பூர்வ மொழி: மாநில அரசின் மசோதாவுக்கு ஆளுநர் ஒப்புதல்



**திருவனந்தபுரம், மார்ச் 6:**

'மலையாள மொழி மசோதா-2025' எனும் இந்த மசோதாவின்படி, கேரளத்தில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் அனைத்து பள்ளிகளிலும் 10-ஆம் வகுப்பு வரை முதல் மொழிப் பாடமாக மலையாளம் கற்பது கட்டாயமாகும். அதேநேரம், மலையாளம் தாய்மொழி அல்லாத மாணவர்களுக்கு விதிவிலக்குகள் அளிக்கப்பட்டுள்ளன.

கடந்த ஆண்டு அக்டோபரில் சட்டப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட இந்த மசோதாவுக்கு கர்நாடக அரசுத் தரப்பில் கடும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.

கேரளத்தில் கர்நாடக எல்லையையொட்டி வாழும் கன்னட மாணவர்கள் மீது மலையாளம் திணிக்கப்படுவதாக குற்றஞ்சாட்டப்பட்டது.

அதேநேரம், 'கேரளத்தில் வாழும் தமிழ், கன்னடம் போன்ற மொழியியல் சிறுபான்மையினரின் மொழி சார் உரிமைகளைப் பாதுகாக்கும் தெளிவான-சந்தேகத்துக்கு இடமில்லாத பிரிவுகள் மசோதாவில் அடங்கியுள்ளன. மொழிச் சுதந்திரத்தை முழுமையாக பாதுகாக்கும் அம்சங்கள் உள்ளன. குறிப்பிட்ட பகுதிகளில் வசிக்கும் தமிழ், கன்னட மக்கள், கேரள அரசுடனான தங்களின் தொடர்புகளை அவர்களின் தாய்மொழியிலேயே தொடர்ந்து மேற்கொள்ள முடியும்.

மலையாளம் தாய்மொழி அல்லாத மாணவர்கள், தேசிய கல்வி பாடத்திட்டத்தின்கீழ் பள்ளிகளில் கிடைக்கப் பெறும் எந்தவொரு மொழியையும் தேர்வு செய்யும் சுதந்திரம் உள்ளது' என்று முதல்வர் பினராயி விஜயன் விளக்கமளித்திருந்தார். மேற்கண்ட மசோதாவின்படி, பிற மாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளில் இருந்து கேரளத்தில் கல்வி பயிலும் மலையாளம் தாய்மொழி அல்லாத மாணவர்கள், 9, 10-ஆம் வகுப்பு மற்றும் மேனிலைக் கல்வி அளவில் கட்டாய மலையாள மொழித் தேர்வை எழுதுவதில் இருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

# சனிப்பெயர்ச்சி: திருநள்ளாறு கோவிலில் பக்தர்களிடம் கெடுபிடி காட்டக்கூடாது – காவலர்களுக்கு டி.ஐ.ஜி. அறிவுரை






**புதுடெல்லி, மார்ச் 6:**

புதுச்சேரியில் உள்ள காரைக்கால் பகுதியில் அமைந்திருக்கும் திருநள்ளாறில் உலகப் புகழ் பெற்ற ஸ்ரீதர்ப்பாரண்யேஸ்வரர் சுவாமி தேவஸ்தானத்தில் தனிசன்னதியில் ஸ்ரீசனீஸ்வர பகவான் அருள்பாலித்து வருகிறார். இங்கு இரண்டரை ஆண்டுகளுக்கு ஒருமுறை வாக்கிய பஞ்சாங்க முறைப்படி சனிப்பெயர்ச்சி விழா வெகுவிமரிசையாக நடைபெறும். இதில் பங்கேற்க நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் லட்சக்கணக்கான பக்தர்கள் கோவிலுக்கு வருகை தருவார்கள்.

அந்த வகையில் நாளை மறுநாள் (வெள்ளிக்கிழமை) சனிப்பெயர்ச்சி விழா நடைபெறுகிறது. அன்றைய தினம், காலை 8.24 மணிக்கு சனி பகவான் கும்ப ராசியில் இருந்து மீன ராசிக்கு இடம் பெயர்கிறார். சனிப்பெயர்ச்சி நேரத்தை கணக்கிட்டு, சனீஸ்வர பகவானுக்கு சிறப்பு அபிஷேகம், அலங்காரம், அர்ச்சனை, தீபாராதனைகள் நடைபெற உள்ளன. இதில் லட்சக்கணக்கான பக்தர்கள் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில், வரும் 6-ந்தேதி சனிப்பெயர்ச்சி விழாவை முன்னிட்டு திருநள்ளாறு கோவிலில் பாதுகாப்பு பணியில் சுமார் ஆயிரம் போலீசார் ஈடுபட உள்ளனர். தேர்தல் பாதுகாப்பு பணிக்கு வந்த 200 மத்திய பாதுகாப்பு படை வீரர்களும் பாதுகாப்பு பணியில் ஈடுபடுவார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அங்கு செய்யப்பட்டுள்ள பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து புதுச்சேரி டி.ஐ.ஜி. சத்திய சுந்தரம் இன்று ஆய்வு செய்தார். இதைத் தொடர்ந்து, பாதுகாப்பு பணியில் ஈடுபடும் போலீசார் பக்தர்களிடம் கெடுபிடி காட்டக் கூடாது என்று காவலர்களிடம் டி.ஐ.ஜி. சத்திய சுந்தரம் அறிவுறுத்தினார்.

# ஜம்மு: எல்லையில் பயங்கரவாதிகளின் ஊடுருவல் முயற்சி முறியடிப்பு



**புதுடெல்லி, மார்ச் 6:**

ஜம்மு-காஷ்மீரின் ரஜௌரி மாவட்டத்தில் உள்ள எல்லைக் கட்டுப்பாடு கோடு (எல்ஓசி) வழியாக இந்தியாவுக்குள் புதன்கிழமை ஊடுறுவ முயன்ற பயங்கரவாதிகள் மேற்கொண்ட முயற்சியை ராணுவ வீரர்கள் முறியடித்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

அதிகாலை 4.15 மணியளவில் சந்தேகத்துக்குரிய நபர்கள் சிலர் துர்கண்டி எல்லைப் பகுதியில் நுழைய முயன்றது கண்டறியப்பட்டது. இதையடுத்து, அவர்கள் மீது ராணுவ வீரர்கள் துப்பாக்கிச்சூடு நடத்தினர்.

இதுதொடர்பாக ஜம்முவைத் தலைமையிடமாக கொண்டு செயல்படும் ராணுவப் பிரிவான வெள்ளை வீரர்கள் படை 'எக்ஸ்' சமூகஊடகத்தில் வெளியிட்ட பதிவில், 'உளவு அமைப்புகளின் தகவல்கள் மற்றும் தொடர் கண்காணிப்பின் மூலம் எல்லைக் கட்டுப்பாடு பகுதியையொட்டிய பிம்பர் காலி பகுதியில் பயங்கரவாதிகளின் நடமாட்டம் கண்டறியப்பட்டது.

விழிப்புணர்வுடன் இருந்த வெள்ளை வீரர்கள் படையால் பயங்கரவாதிகளின் ஊடுறுவல் முயற்சியை தோல்வியில் முடிந்தது.

களத்தில் ஒருங்கிணைந்து செயல்பட்டதன் மூலம் எதிரிகளின் திட்டம் முறியடிக்கப்பட்டது' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ராணுவ வீரர்கள் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் பயங்கரவாதிகள் உயிரிழந்தனரா என்பது குறித்து ராணுவ அதிகாரிகள் தெரிவிக்கவில்லை.

ரஜௌரியின் சுந்தர்பானி செக்டாரில் கடந்த பிப்.19 மற்றும் 20 தேதிகளில் எல்லை தாண்ட முயன்ற பயங்கரவாதிகளின் முயற்சி தோல்வியில் முடிந்தது. அவர்கள் கொண்டு வந்த ஆயுதங்களை ராணுவத்தினர் கைப்பற்றினர்.

# இயற்கை எரிவாயு உற்பத்தியை நிறுத்தியது கத்தார்: இந்திய விநியோகம் பாதிக்க வாய்ப்பு

**புதுடெல்லி, மார்ச் 6:**

திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயு (எல்என்ஜி) உற்பத்தியை கத்தார் நிறுத்தியுள்ளது. இதனால், இந்தியாவுக்கான எரிவாயு விநியோகம் பாதிக்கும் சூழல் உருவாகியுள்ளது.

கத்தாருடன் இந்தியா நீண்ட காலத்துக்கான இயற்கை எரிவாயு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது. இந்தியாவின் எரிவாயு தேவையை நிறைவு செய்வதில் கத்தார் முக்கியப் பங்கு வகிக்கிறது. இந்நிலையில், ஈரான் நடத்திய வான்வழித் தாக்குதலில் கத்தாரில் உள்ள எரிவாயு உற்பத்தி ஆலை பாதிக்கப்பட்டது. இதையடுத்து, அங்கு உற்பத்தி நிறுத்தப்பட்டுள்ளது. இதனால், இந்தியாவுக்கான எரிவாயு விநியோகம் பாதிக்கும் சூழல் எழுந்துள்ளது. இதனால் தொழிலக பயன்பாடு மற்றும் நகர்ப்புறங்களில் வீட்டு உபயோகத்துக்கு குழாய் மூலம் எரிவாயு விநியோக நிறுவனங்கள் பாதிக்கப்படும் என்று தெரிகிறது.

தொழில் நிறுவனங்களில் எல்என்ஜி-க்கு பதிலாக சற்று விலை அதிகமான சிஎன்ஜி எரிவாயுவைப் பயன்படுத்தி நிலைமையைச் சமாளிக்க வாய்ப்பு உள்ளது. இந்தியாவின் மிகப்பெரிய எல்என்ஜி இறக்குமதியாளரான பெட்ரோநெட் எல்என்ஜி நிறுவனம், கத்தாருக்கு சரக்கு கப்பல்களை அனுப்பிவைக்க முடியாத நிலையில் உள்ளது. ஹோர்முஸ் நீரிணை மூடப்பட்டுள்ளதே இதற்கு முக்கியக் காரணமாகும். இது தவிர கத்தாரும் இந்தியாவுக்கு விநியோகம் செய்ய பயன்படுத்திய எரிவாயு மையத்தில் ஈரான் தாக்குதல் காரணமாக உற்பத்தியை நிறுத்திவைத்துள்ளது. இது தொடர்பாக இரு தரப்புமே முறைப்படி தகவல்களைப் பரிமாறிக்கொண்டன. கத்தார் ஆண்டுதோறும் இந்தியாவுக்கு 27 மில்லியன் டன் எல்என்ஜி ஏற்றுமதி செய்து வருகிறது. இது இந்தியாவின் மொத்த எல்என்ஜி இறக்குமதியில் 40 சதவீதமாகும். வீட்டு உபயோகத்துக்காக குழாய் மூலம் என்எல்ஜி விநியோகிக்கும் தனியார் நிறுவனங்கள் தங்களுக்கு எழுந்துள்ள விநியோகப் பிரச்னை தொடர்பாக அரசின் எரிவாயு நிறுவனமான கெயில் நிறுவனத்துக்கு கடிதம் எழுதியுள்ளன.

# மாநிலங்களவைத் தேர்தலில் சரத் பவாருக்கு காங்கிரஸ் ஆதரவு!

**புதுடெல்லி, மார்ச் 6:**

மாநிலங்களவைத் தேர்தலில் தேசியவாத காங்கிரஸ் கட்சியின் தலைவர் சரத் பவாருக்கு காங்கிரஸ் கட்சி ஆதரவை தெரிவித்துள்ளது. மகாராஷ்டிர மாநிலத்தில் உள்ள 7 மாநிலங்களவை இடங்களில் ஒரு இடத்தை தக்கவைக்கும் நோக்கத்தில் எதிர்க்கட்சிகள் செயல்பட்டு வருகின்றன. இதனால் மகா விகாஷ் அகாடி கூட்டணியிலுள்ள சரத் பவாருக்கு காங்கிரஸ் ஆதரவு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் பொதுச்செயலாளர் ரமேஷ் சென்னிதாலா, நடப்பு மாநிலங்களவை உறுப்பினராக உள்ள சரத் பவாருக்கு காங்கிரஸ் தலைமை தனது ஆதரவை தெரிவித்துள்ளதாகக் கூறினார். மாநிலங்களவை உறுப்பினர் தேர்தலுக்கு நாளையுடன் (மார்ச் 5) மனுத்தாக்கல் நிறைவுபெறவுள்ள நிலையில், இன்று சரத் பவாருக்கு காங்கிரஸ் கட்சி ஆதரவு தெரிவித்துள்ளது. மகாராஷ்டிர சட்டப்பேரவையில் 288 இடங்களில் 286 உறுப்பினர்கள் மட்டுமே உள்ளர். 2 இடங்கள் காலியாக உள்ளன. எனவே, மாநிலங்களவை உறுப்பினரை தேர்வு செய்ய 36 எம்.எல்.ஏ.க்களின் ஆதரவு தேவை. 7 மாநிலங்களவை உறுப்பினர் பதவி ஏப்ரல் மாதத்தில் காலியாகவுள்ளதால், அதில் ஒரு இடத்தை எதிர்க்கட்சிகள் இணைந்து தேர்வு செய்கின்றன.

எதிர்க்கட்சியில் சிவசேனைக்கு 20 உறுப்பினர்களும், காங்கிரஸுக்கு 16 உறுப்பினர்களும், தேசியவாத காங்கிரஸ் (சரத் பவார் அணி) 10 உறுப்பினர்களும் உள்ளனர்.

# ரூ.13.5 கோடி போதைப் பொருள் பறிமுதல்: பெங்களூருவில் 3 பேர் கைது

**பெங்களூரு, மார்ச் 6:**

பெங்களூரு மாநகர காவல் ஆணையர் சீமந்த் குமார் சிங் நேற்று செய்தியாளர்களிடம் கூறியதாவது: பெங்களூரு மத்திய குற்றப்பிரிவு போலீஸார் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினருடன் இணைந்து பாகலூர், கெம்பே கவுடா நகர், ஒயிட் ஃபீல்ட் உள்ளிட்ட இடங்களில் போதைப் பொருள் கடத்தலைத் தடுக்கும் பணியில் ஈடுபட்டனர்.

அப்போது பாகலூரை சேர்ந்த அஸ்வின் (26), மொபினா (25) ஆகிய இருவரிடம் இருந்து 5.46 கிலோ ஹைட்ரோ கஞ்சா, 5.34 கிலோ ஷரஸ், 8,335 எல்எஸ்டி கட்டிகள் உள்ளிட்ட போதைப் பொருட்கள் சிக்கின. அவர்களிடம் இருந்து 1 கார், 2 இரு சக்கர வாகனங்கள், 3 செல்போன்கள், ரூ.25 ஆயிரத்து 500 ரொக்கம் ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டன.

இந்த 2 பேர் மீதும் வழக்குப் பதிவு செய்து பாகலூர் போலீஸார் கைது செய்தனர். முதற்கட்ட விசாரணையில், "கேரளத்தைச் சேர்ந்த அவர்கள் கல்லூரி படிப்பிற்காக பெங்களூருவுக்கு வந்துள்ளனர். ஆனால் படிப்பை பாதியிலேயே விட்டுவிட்டு, தாய்லாந்தில் இருந்து கூரியர் மூலம் போதைப் பொருட்களை வர வழைத்து விற்பனை செய்தது தெரியவந்துள்ளது.

இதேபோல ஒயிட் ஃபீல்டில் 27 கிலோ கஞ்சாவும், கெம்பேகவுடா நகரில் 3 கிலோ ஹைட்ரோ கஞ்சாவும் சிக்கியது. மொத்தமாக பறிமுதல் செய்யப்பட்ட போதைப் பொருட்களின் சந்தை மதிப்பு ரூ.13.5 கோடி என மதிப்பிடப் பட்டுள்ளது. இவ்வாறு அவர் தெரிவித்தார். விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

# தமிழக பெருமாள் கோயிலில் இருந்து கடத்தல் - திருமங்கை ஆழ்வார் சிலை இந்தியாவிடம் ஒப்படைப்பு



**புதுடெல்லி, மார்ச் 6:**

லண்டனில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் திருமங்கை ஆழ்வார் சிலை இந்தியத் தரப்பிடம் முறைப்படி ஒப்படைக்கப்பட்டதாக, இந்தியத் தூதரகம் தெரிவித்துள்ளது. இது, உண்மையிலேயே தங்களுக்கு குறிப்பிடத்தக்க தருணம் என்று ஆஷ்மோலியன் அருங்காட்சியகம் பெருமிதம் தெரிவித்துள்ளது. 17-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இந்த அருங்காட்சியகம், பிரிட்டனின் முதல் பொது அருங்காட்சியகம் என்ற சிறப்புக்குரியதாகும்.

மேலும் 4 தொல் பொருள்கள்...: இதேபோல், இந்திய வருவாய் புலனாய்வு இயக்குநரகம் (டிஆர்ஐ) பகிர்ந்த தகவல்களின் அடிப்படையில், அமெரிக்காவின் உள்நாட்டு பாதுகாப்பு புலனாய்வு அமைப்பு, லண்டன் காவல் துறையின் கலை மற்றும் தொல்பொருள்கள் மீட்பு பிரிவின் உதவியுடன் லண்டனில் மீட்கப்பட்ட நடனமாடும் குழந்தை சம்பந்தர் சிலை, நடனமாடும் விநாயகர் சிலை, குடையுடன் அமர்ந்த விநாயகர் சிலை, சிலைப் பீடம் என மேலும் 4 தொல் பொருள்களும் இந்தியத் தரப்பிடம் ஒப்படைக்கப்பட்டன. இவை அனைத்தும் இந்தியாவுக்கு அனுப்பப்பட தயார் நிலையில் உள்ளன. இது தொடர்பாக பிரிட்டனுக்கான இந்தியத் தூதர் விக்ரம் துரைசாமி கூறுகையில், 'நான் அறிந்தவரை, ஆஷ்மோலியன் அருங்காட்சியகம் தங்கள் வசமிருந்த ஒரு பழங்கால சிலையை இந்தியாவிடம் திருப்பி ஒப்படைப்பது இதுவே முதல்முறையாகும். இது உண்மையிலேயே பாராட்டுக்குரியது. வரலாற்று தொல்பொருள்கள் மற்றும் கலாசார முக்கியத்துவம் வாய்ந்த பொருள்களின் எல்லை தாண்டிய கடத்தலை எதிர்கொள்வதில் இருதரப்பு மற்றும் பன்முக அமைப்புகளின் ஒத்துழைப்பின் வலிமைக்கு இந்த நிகழ்வு ஓர் உதாரணம்' என்றார்.

# ரஷியாவிடம் இருந்து இந்தியா மீண்டும் அதிக கச்சா எண்ணெய் வாங்க வாய்ப்பு




**புதுடெல்லி, மார்ச் 6:**

மேற்காசியா பதற்றம் காரணமாக, ரஷியாவிடம் இருந்து இந்தியா மீண்டும் அதிக கச்சா எண்ணெய் வாங்க வாய்ப்பு இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

கடந்த 2024-25-ஆம் ஆண்டு கால கட்டத்தில் ரஷியாவிடம் இருந்து இந்தியா நாளொன்றுக்கு 15 லட்சம் பேரல் முதல் 20 லட்சம் பேரல் வரை கச்சா எண்ணெய்யை இறக்குமதி செய்தது. ஆனால், உக்ரைன் போர் விவகாரத்தில் ரஷியாவை பணிய வைக்கும் முயற்சியில் அந்நாட்டின் கச்சா எண்ணெய் விற்பனைக்கு எதிராக அமெரிக்கா நடவடிக்கை மேற்கொண்டது.


இதன் ஒருபகுதியாக, ரஷியாவிடம் இருந்து அதிக கச்சா எண்ணெய் இறக்குமதி செய்த இந்தியாவுக்கு நெருக்கடி அளிக்கும் வகையில், இந்தியாவில் இருந்து தங்கள் நாட்டுக்கு இறக்குமதி ஆகும் பொருள்கள் மீது அமெரிக்கா கூடுதல் வரி விதித்தது. இதையடுத்து ரஷியாவிடம் இருந்து கச்சா எண்ணெய் இறக்குமதியை இந்தியா குறைத்தது. இதனால் அமெரிக்கா தனது கூடுதல் வரி விதிப்பை திரும்ப பெற்றது.

இந்நிலையில், இஸ்ரேல், அமெரிக்காவுடனான போரால் மேற்காசியாவில் இருந்து கச்சா எண்ணெய் கொண்டு செல்ல பயன்படுத்தப்படும் ஹார்முஸ் ஜலசந்தி கடல் வழித்தடத்தை ஈரான் மூடிவிட்டது.

இதனால் சவூதி அரேபியா, ஈராக், கத்தார் உள்ளிட்ட நாடுகளில் இருந்து கச்சா எண்ணெய், கப்பல் மூலம் இந்தியாவுக்கு வருவது பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் உள்நாட்டில் பெட்ரோல், டீசல் தட்டுப்பாடு ஏற்படாமல் இருக்கும் வகையிலும், விலை ஏற்றம் ஏற்படாமல் தவிர்க்கும் நோக்கிலும் ரஷியாவிடம் இருந்து மீண்டும் 15 லட்சம் பேரல் முதல் 20 லட்சம் பேரல் வரை கச்சா எண்ணெய்யை இந்தியா வாங்க வாய்ப்பு இருப்பதாக சந்தை நிபுணர் மேக்ஸிம் மால்கம் தெரிவித்துள்ளார்.

ரஷிய துணைப் பிரதமர் அலெக்ஸாண்டர் நோவக்கும் இந்தியாவிடம் இருந்து அதிக கச்சா எண்ணெய் கேட்டு கோரிக்கை வந்திருப்பதாக தெரிவித்துள்ளார்.

# ஸ்ரீநகர் மத்திய சிறை கண்காணிப்பாளராக முதன்முறையாக பெண் அதிகாரி நியமனம்



**ஸ்ரீநகர், மார்ச் 6:**

ஸ்ரீநகர் மத்திய சிறையின் கண்காணிப்பாளராக முதன் முறையாக பெண் அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக கடந்த திங்கட்கிழமை மாலை வெளியான அரசு உத்தரவின்படி, ஜம்மு காஷ்மீரில் உள்ள வெவ்வேறு சிறைகளுக்கு 4 அதிகாரிகள் கண்காணிப்பாளர்களாக நியமிக்கப்பட்டனர். இவர்களில் ஸ்ரீநகர் மத்திய சிறைக்கான பொறுப்பு 2012ம் ஆண்டு பேட்ச் அதிகாரி சபா ஷாலுக்கு வழங்கப்பட்டது. சபா ஷால் இந்த நியமனத்துக்கு முன், ஜம்மு காஷ்மீர் சிறைகள் துறை தலைமை இயக்குநர் அலுவலகத்தில் பணியாளர் அதிகாரியாக பணியாற்றினார். ஜம்மு காஷ்மீர் சிறைகள் துறையில் மக்கள் தொடர்பு அதிகாரியாகவும் அவர் பணியாற்றியுள்ளார். ஸ்ரீநகரில் வசதியான மக்கள் வசிக்கும் பிர் பாக் பகுதியில் வசிக்கும் சபா ஷால், சமூகப் பணியில் முதுகலைப் பட்டம் பெற்றுள்ளார். கடந்த 2012ல் காஷ்மீர் அரசுப் பணிகள் தேர்வாணைய தேர்வில் தேர்ச்சி பெற்றார்.

இவரை அறிந்த அதிகாரிகள் கூறுகையில், "சபா ஷால் தனது பணியில் நன்கு தேர்ச்சி பெற்றவர். நிறைந்த அனுபவம் கொண்டவர். இருப்பினும் இது அவருக்கு ஒரு சவாலான பணியாகவே இருக்கும். என்றாலும் சிறைத் துறையை அவர் நன்கு அறிந்தவர் என்பதால் திறம்பட பணியாற்றுவார் என நம்புகிறோம்" என்றனர்.

ஜம்மு காஷ்மீரின் பழமையான சிறைகளில் ஸ்ரீநகர் சிறையும் ஒன்றாகும். அரசியல் கைதிகள் உட்பட 900-க்கும் மேற்பட்டோர் இங்கு அடைக்கப்பட்டுள்ளனர். காவல் துறை மட்டுமின்றி மத்திய தொழிலக பாதுகாப்பு படையும் இதற்கு பாதுகாப்பு அளிக்கிறது. கடந்த காலங்களில் வெளிநாட்டு தீவிரவாதிகள், பிரிவினைவாத தலைவர்கள் பலர் இந்த சிறையில் இருந்தனர். பிறகு இவர்களில் பெரும்பாலானோர் கோட் பல்வால், ஜம்மு உள்ளிட்ட நகரங்களில் உள்ள சிறைகளுக்கு மாற்றப்பட்டனர்.

# மத்திய கிழக்கில் கடல்சார் பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடக்கம்: மத்திய அமைச்சர் தகவல்

**புதுடெல்லி, மார்ச் 6:**

மத்திய கிழக்கில் நிலவும் போர் சூழலுக்கு மத்தியில், இந்தியாவின் கடல்சார் உடைமைகள் மற்றும் அலுவலர்களை பாதுகாக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளதாக மத்திய கப்பல் போக்குவரத்துத் துறை அமைச்சர் சர்வானந்த சோனோவால் தெரிவித்தார்.

ஈரான், அமெரிக்கா-இஸ்ரேல் போர் காரணமாக பாரசீக வளைகுடாவை அரபிக் கடலுடன் இணைக்கும் ஹோர்முஸ் நீரிணை வழி சமீபத்தில் மூடப்பட்டது. இதன் தாக்கம் குறித்து தில்லியில் அமைச்சர் சர்வானந்த சோனோவால் தலைமையில் ஆய்வுக் கூட்டம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இதைத் தொடர்ந்து அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியுள்ளதாவது: மத்திய கிழக்கில் நிலவிவரும் சூழலை உன்னிப்பாக கண்காணித்து வருகிறோம். இந்திய மாலுமிகளின் நலன் மற்றும் கடல்சார் உடைமைகளின் பாதுகாப்பை உறுதி செய்ய முன்னெச்சரிக்கை, கண்காணிப்பு மற்றும் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை செயல்படுத்தியுள்ளோம். இந்தியக் கப்பல்கள் மற்றும் பணியாளர்களை பாதுகாக்க தேவையான உதவிகளை வழங்க அரசு தயாராக உள்ளது. இந்தியாவின் கடல்சார் நலன்களைப் பாதுகாக்க உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அமைப்புகளுடன் ஒருங்கிணைந்த நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறோம் என தெரிவித்தார்.




# சென்னை | சீரியல் நடிகை உடை மாற்றுவதை வீடியோ எடுத்த ராணுவ வீரர் கைது

**சென்னை, மார்ச் 6:** விருகம்பாக்கத்தில் 31 வயதுடைய டிவி சீரியல் நடிகை ஒருவர் வசித்து வருகிறார்.

இவரது வீட்டின் அருகே பஞ்சாப் மாநிலத்தை சேர்ந்த முன்னாள் ராணுவ வீரர் ஒருவர் வசிக்கிறார். மேலும், இவர் தனியார் வங்கி தலைவரின் பாதுகாவலராகவும் உள்ளார்.

இந்நிலையில் நடிகை வீட்டுக்கு வரும்போதும் போகும் போதும், முன்னாள் ராணுவ வீரர் தவறான கண்டோட்டத்தில் பார்ப்பதாக குற்றச்சாட்டு எழுந்தது.

இந்நிலையில், நேற்று முன்தினம் இரவு படப்பிடிப்பு முடிந்து, நடிகை வீட்டில் உடைமாற்றிக் கொண்டிருந்துள்ளார். அப்போது, அந்த முன்னாள் ராணுவ வீரர் ஜன்னல் கதவை திறந்து எட்டிப்பார்த்துள்ளார்.

மேலும், வீடியோ எடுக்க முயன்றதாகவும் கூறப்படுகிறது. இந்த விவகாரம் குறித்து விருகம்பாக்கம் காவல் நிலையத்தில் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி போலீஸார் சம்பந்தப்பட்ட முன்னாள் ராணுவ வீரரை கைது செய்து விசாரித்து வருகின்றனர்.

# 'கல்லூரிக்குப் போவதாகத்தான் சொன்னான்' - விஜய்யை காணசென்று விபத்து... மாணவரின் தந்தை கண்ணீர் மல்க பேட்டி



**தஞ்சாவூர், மார்ச் 6:** தஞ்சாவூரில் இன்று தமிழக வெற்றிக் கழகத் தலைவர் விஜய்யின் வாகனத்தைப் பின்தொடர்ந்து சென்று, விபத்தில் சிக்கி திருச்சியைச் சேர்ந்த கல்லூரி மாணவர் படுகாயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்று வருகிறார்.

இந்நிலையில் இந்த சம்பவம் குறித்து தனக்கு எதுவும் தெரியாது என்றும், கல்லூரிக்கு செல்வதாகவே கூறிவிட்டு விக்னேஷ் சென்றதாகவும், கல்லூரி தரப்பிலிருந்து தனக்கு எதுவும் தெரிவிக்கப்படவில்லை எனவும் விபத்துக்குள்ளான மாணவனின் தந்தை கண்ணீர்மல்க பேட்டியளித்துள்ளார்.

இதுதொடர்பாக பேசிய அவர்,

"எனக்கு இரட்டை பிள்ளைகள். குமரேஷ், விக்னேஷ். இதில் விக்னேஷிற்குத்தான் அடிப்பட்டுள்ளது. காலையில் பேட்டரி வாகனத்தைதான் கொடுத்து அனுப்பினேன். கல்லூரி செல்வதாக கூறிவிட்டு நண்பனோடு வேறு வண்டியில் இங்கு வந்துள்ளார். எனக்கு 11.30 மணிக்குதான் தெரியும் அடிப்பட்டது.

தலையில் ரத்தக்கசிவு ஏற்பட்டுள்ளது. காலில் எலும்பு முறிந்துள்ளது எனக் கூறுகிறார்கள். 48 மணிநேரம் ஆகும் எனக் கூறுகிறார்கள். மற்றொரு பையனுக்கு (அருண்) முதுகில் அடிப்பட்டுள்ளது. நான் பால்வியாபாரம் செய்கிறேன். கல்லூரியிலிருந்து வந்துள்ளனர்." என தெரிவித்தார்.

தஞ்சாவூரின் செங்கிப்பட்டி அருகேயுள்ள அய்யாசாமபட்டியில் இன்று தவெக தேர்தல் பரப்புரை மற்றும் கட்சி நிர்வாகிகள் சந்திப்புக் கூட்டம் நடைபெற்றது. இதில் கலந்துகொள்வதற்காக அக்கட்சியின் தலைவர் விஜய், இன்று திருச்சி விமான நிலையத்தில் இருந்து தஞ்சாவூர் சென்றார். அப்போது விஜய்யின் வாகனத்தை ரசிகர்கள் பலர் இருசக்கர வாகனங்களில் பின்தொடர்ந்தனர்.

திருச்சி - தஞ்சாவூர் தேசிய நெடுஞ்சாலையில் புதுக்குடி அருகே சென்றபோது, விக்னேஷ் ஓட்டிச் சென்ற பைக், பின்னால் வந்தவர்கள் மோதியதில் முன்னால் சென்ற கார் மீது மோதியது. இதில் விக்னேஷும், பைக்கில் அவருடன் வந்த அவரது நண்பர் அருணும் காயமடைந்தனர்.

தலையில் பலத்த காயமடைந்த விக்னேஷ் உயிருக்கு ஆபத்தான நிலையில் தற்போது தஞ்சாவூரில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அருணுக்கு முதுகில் அடிப்பட்டுள்ளதால் இன்றே அறுவை சிகிச்சை செய்யவேண்டும் என மருத்துவர்கள் தெரிவத்துள்ளனர். இவர்கள் மட்டுமின்றி விஜய்யின் வாகனத்தைத் துரத்திச் சென்ற வெவ்வேறு இடங்களில் நிகழ்ந்த விபத்துகளில் மொத்தம் 5 பேர் காயமடைந்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# நகைப்பட்டறையில் சிலிண்டர் வெடித்த விபத்தில் மேலும் 4 வடமாநில தொழிலாளர்கள் உயிரிழப்பு

**சென்னை, மார்ச் 6:** நகைப்பட்டறையில் காஸ் கசிந்து சிலிண்டர் வெடித்த விபத்தில் சிகிச்சை பெற்று வந்த மேலும் 4 வடமாநில தொழிலாளர்கள் உயிரிழந்தனர். சென்னை சவுகார்பேட்டை, சிங்கண்ணன் தெருவில், 4 மாடி கட்டிடத்தில் நகைப்பட்டறை ஒன்று செயல்பட்டு வந்தது.

மேற்கு வங்க மாநிலம், கொல்கத்தாவைச் சேர்ந்த சுமன் பால் பி சோகித் (35) என்பவர் இந்த நகைப்பட்டறையை நடத்தி வந்தார். இந்த பட்டறையில் வடமாநிலத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் தங்கி வேலை பார்த்து வந்தனர்.

இங்கு பழைய,புதிய தங்கத்தை உருக்கி புதிய நகைகள் தயாரித்து சென்னையில் உள்ள நகைக்கடைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டு வந்தது. இந்நிலையில், கடந்த 25-ம் தேதி இரவு ஊழியர்கள் நகைகளை வழக்கம்போல் உருக்கும் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது எதிர்பாராத விதமாக அங்கிருந்த சிலிண்டரில் காஸ் கசிவு ஏற்பட்டு தீ விபத்து ஏற்பட்டது. சிறிது நேரத்தில் 2 சிலிண்டர்கள் வெடித்து சிதறியது.

இதில், ஏற்பட்ட தீ விபத்தில் கட்டிடத்தின் ஒரு பகுதி இடிந்து ஊழியர்கள் 7 பேரும் தீயில் சிக்கி படுகாயமடைந்தனர். காயமடைந்த அனைவரையும் தீயணைப்பு வீரர்கள் மீட்டு கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு சிகிச்சை பலனின்றி நகைப்பட்டறை உரிமையாளர் சுமன் பால் பி சோகித் உயிரிழந்தார்.

மீதமுள்ள நகைப்பட்டறை ஊழியர்களான மேற்குவங்கத்தைச் சேர்ந்த அரவிந்த் தாக்கல் (27), ஜாந்தோ இந்திரஜித், சிமந்தோமால் (47), ராகேஷ் (26) ஆனந்த் (32), சூரஜ் (25) ஆகிய 6 பேருக்கு தொடர் சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது.

இதில், சிமந்தோமால், ராகேஷ், சூரஜ், அரவிந்த் ஆகிய 4 பேர் அடுத்தடுத்து உயிரிழந்தனர். ஜாந்தோ இந்திரஜித், ஆனந்த் ஆகிய இருவருக்கும் தொடர் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. விபத்துக்கு சதிச் செயல் ஏதேனும் காரணமா? என யானைகவுனி போலீஸார் விசாரித்து வருகின்றனர்.

# நில ஆவணம், பட்டா மாறுதல் அறிக்கை இணையவழி சேவை தொடக்கம்

**சென்னை, மார்ச் 6:** வருவாய், பேரிடர் மேலாண்மைத் துறையின் கீழ் இயங்கிவரும் நில அளவை, மற்றும் நிலவரித் திட்டத் துறையால் இணையவழி ஆவணங்களான 'அ' பதிவேடு, சிட்டா மற்றும் புலப்படம் ஆகியவை இணையவழி பயன்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

இந்த ஆவணங்களின் விவரங்களை ஒருங்கிணைத்து, நில உரிமைதாரர்களுக்கு 'ஒருங்கிணைந்த நில ஆவணம்' *(Integrated Land Record)* என்ற சேவையையும், இணைய வழியில் ஒரு புல எண்ணில் நடைபெறும் பட்டா மாறுதல் விவரங்களை பொது மக்கள் தெரிந்து கொள்ளும் வகையில் 'பட்டா மாறுதல் விவரங்களின் அறிக்கை' *(History of Patta Transfer)*




என்ற சேவையையும் வருவாய்த்துறை அமைச்சர் சாத்தூர் ராமச்சந்திரன் நேற்று தொடங்கி வைத்தார்.

இந்த நிகழ்வில், துறை செயலர் பெ.அமுதா, நில நிர்வாக ஆணையர் கஜலட்சுமி உள்ளிட்டோர் பங்கேற்றனர். இந்த புதிய சேவை மூலம், நில உரிமைதாரர்கள் தங்களது நிலம் சார்ந்த விவரங்களை உள்ளீடு செய்து *https://eservices.tn.gov.in/eservicesnew/home.html* என்ற இணையதளத்தில் 'ஒருங்கிணைந்த நில ஆவணத்தை பார்வையிட்டு பதிவிறக்கம் செய்யலாம்.

பட்டா மாறுதல் விவர அறிக்கையை பொருத்தவரை, நில உரிமையாளர்கள் *https://eservices.tn.gov.in/eservicesnew/home.html* என்ற இணையதளத்தில் *https://tamilnilam.tn.gov.in/citizen* என்ற தலைப்பை தேர்வு செய்து, தங்கள் நிலம் சார்ந்த விவரங்கள் மற்றும் விவரம் தேவைப்படும் தேதியினை தேர்வு செய்ய வேண்டும்.

பின்னர், பட்டா மாற்ற விவரக்கட்டணமாக ஆண்டு ஒன்றுக்கு ரூ.50 வீதம் மற்றும் செயலாக்க கட்டணமாக ரூ.60 ஆகியவற்றை இணையம் வாயிலாக செலுத்தி விண்ணப்பித்து, 'முந்தைய பட்டா மாறுதல் விவர அறிக்கை' யை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் என்று தமிழக அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

# மெரினாவில் ஆக்கிரமிப்பு கடைகள் மாஃபியாக்களின் கட்டுப்பாட்டில் இருந்தன: நீதிபதிகள் குற்றச்சாட்டு

**சென்னை, மார்ச் 6:** உயர் நீதிமன்றம் தலையிட்டு சீரமைப்பு நடவடிக்கைகளை எடுக்கும் வரை மெரினாவை ஆக்கிரமித்திருந்த கடைகள் மாஃபியாக்களின் கட்டுப்பாட்டில் இருந்ததாக சென்னை உயர் நீதிமன்ற நீதிபதிகள் பகிரங்கமாக குற்றம் சாட்டியுள்ளனர்.




சென்னை மெரினா கடற்கரையில் உள்ள கடைகளை முறைப்படுத்துவது தொடர்பான வழக்கை விசாரித்த சென்னை உயர் நீதிமன்ற நீதிபதிகள் ஆர்.சுரேஷ்குமார், ஏ.டி.ஜெகதீஷ் சந்திரா ஆகியோர் அடங்கிய அமர்வு, மெரினாவில் உணவுப் பொருட்கள், பொம்மை மற்றும் பேன்சி கடைகள் என மொத்தம் 300 கடைகளுக்கு மட்டுமே அனுமதி வழங்க வேண்டுமென்றும், இதற்கான பயனாளிகளை தேர்வு செய்ய ஜம்மு-காஷ்மீர் உயர் நீதிமன்ற ஓய்வு பெற்ற தலைமை நீதிபதியான என்.பால்வசந்த குமாரை நியமித்தும் உத்தரவிட்டிருந்தனர்.

அதன்படி 300 பேருக்கு மெரினாவில் கடைகள் ஒதுக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் இந்த வழக்கு நீதிபதிகள் ஆர்.சுரேஷ்குமார், ஏ.டி.ஜெகதீஷ் சந்திரா ஆகியோர் அடங்கிய அமர்வில் நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது மெரினாவில் ஏற்கெனவே கடைகளை வைத்திருந்த 600-க்கும் மேற்பட்டோர் இந்த வழக்கில் தங்களையும் இணைக்கக்கோரி இடையீட்டு மனுக்களை தாக்கல் செய்திருந்தனர்.

அந்த மனுக்களை விசாரித்த நீதிபதிகள், "கடற்கரைக்கு அருகில் உள்ள வியாபார மண்டலங்களில் மட்டுமே கடைகள் ஒதுக்கப்பட வேண்டும். மெரினாவை வியாபாரத் தலமாக மாற்ற ஒருபோதும் அனுமதிக்க முடியாது.

கேரளாவின் கோவளம், ஒடிசாவின் பூரி, மும்பை மெரைன் டிரைவ் போன்ற கடற்கரைகளைப்போல மெரினாவையும் அழகுபடுத்தி சுத்தமாக பராமரித்தால் மட்டுமே இந்திய சுற்றுலா பயணிகள் மட்டுமின்றி வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளும் அதிகளவில் வருகை தருவர்.

நீதிமன்றம் தலையிடும் முன்பாக, மெரினா கடற்கரை முழுமையாக கடைகளால் ஆக்கிரமிக்கப்பட்டு சுத்தமில்லாமல் இருந்தது. அந்த கடைகள் மாஃபியா கும்பல்களின் கட்டுப்பாட்டில் இருந்தன. கடை உரிமையாளர்களை மிரட்டி மாமூல் வசூலித்து வந்த அந்த கும்பல் நீதிமன்ற தலையீடு காரணமாக பின்புலத்தில் இருந்து கொண்டு சிலரைத் தூண்டிவிடுகிறது.

அதன் காரணமாகவே இந்த மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளனவா என்ற சந்தேகம் உள்ளது. தற்போது கடைகள் பெற்றுள்ள 300 பேரும், யாருக்கும், எதற்காகவும் பணம் கொடுக்காமல் நேர்மையான முறையில் கடைகளைப் பெற்றுள்ளனர்.

கடைகளை முறைப்படுத்தும் நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்தால் அழகான மெரினாவை எதிர்காலச் சந்ததியினருக்கு விட்டுச்செல்ல முடியாது.

மெரினா கடற்கரை ஒன்றும் வியாபாரத் தலம் அல்ல. அங்கு கடைகள் அமைப்பதை யாரும் உரிமையாக கோர முடியாது. அதிகாரிகளுடன் இணைந்து நாங்கள் நேரடி கள ஆய்வு செய்ததன் அடிப்படையில் நீலக்கொடி மண்டலங்களுடன் சர்வதேச அந்தஸ்துக்கு தரம் உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அதற்கு ஒருபோதும் இடையூறு செய்யக் கூடாது. இந்த இடையீட்டு மனுக்கள் மீது பின்னர் உத்தரவு பிறப்பிக்கப்படும்'' எனக்கூறி விசாரணையை தள்ளி வைத்துள்ளனர்.

# வாகனத்தின் விளக்கை சேதப்படுத்தியதற்காக மன்னிப்பு கடிதத்துடன் ரூ.200 வைத்துச் சென்ற நபரால் நெகிழ்ச்சி

**சென்னை, மார்ச் 6:** ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனையில் நிறுத்திவைக்கப்பட்ட பைக்கின் லைட்டை தவறுதலாக சேதப்படுத்தியதற்காக சம்பந்தப்பட்ட நபர் மன்னிப்பு கடிதத்துடன் ரூ.200-ஐ வைத்துச் சென்ற சம்பவம் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.




சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனைக்கு ஆயிரக்கணக்கானோர் தினமும் சிகிச்சைக்காக வந்து செல்கின்றனர். தமிழகம் மட்டும் அல்லாமல் அண்டை மாநில மக்களும் உள்நோயாளியாகவும், புற நோயாளியாகவும் சிகிச்சை பெறுகின்றனர்.

இருசக்கர வாகனங்களில் வருவோர் மருத்துவமனை வளாகத்திலேயே அதை நிறுத்திவிட்டு செல்வார்கள். அப்படி, சிகிச்சை பெற்று வரும் உறவினரைப் பார்க்க வந்த நபர் ஒருவர் தனது பைக்கை இரு தினங்களுக்கு முன்பு அந்த மருத்துவமனை வளாகத்தில் நிறுத்திவிட்டு மருத்துவமனை வார்டுக்கு சென்றுள்ளார்.

சிறிது நேரத்துக்கு பிறகு திரும்பி வந்து பார்த்தபோது, அவரது பைக்கின் பின்புற சிகப்பு நிற லைட் உடைந்திருந்தது. இதைக் கண்ட அவர், தனது வாகனத்தை யார் சேதப்படுத்தியது என கோபத்துடன் அங்கும், இங்கும் பார்த்துள்ளார். திட்டிவிட்டு பைக்கை எடுக்க முயன்றபோது, அதில் மாட்டியிருந்த ஹெல்மெட்டில் ஒரு சிறிய காகிதம் சுருட்டி வைக்கப்பட்டிருந்தது.

அதை திறந்து பார்த்தபோது அதில், 'பைக் லைட்டை உடைத்ததற்கு மன்னிக்கவும்' என ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்தது. மேலும், அதனுடன் 2 நூறு ரூபாய் நோட்டுகள் வைக்கப்பட்டு இருந்தது. லைட்டை சரி செய்து கொள்வதற்காக இந்த 200 ரூபாய் வைக்கப்பட்டிருந்தது.

இதைக் கண்டு அந்த நபர் நெகிழ்ச்சி அடைந்தார். மேலும் இதை புகைப்படம் எடுத்து சமூக வலைதளங்களில் பதிவிட்டார். "லைட்டை சேதப்படுத்திய நபர் எதுவும் தெரியாததுபோல் கடந்து சென்றிருக்கலாம்.

ஆனால் தவறு நிகழ்ந்ததற்கு வருந்தி, மன்னிப்புக் கடிதம் எழுதி வைத்ததோடு, இழப்பீடாக பணத்தையும் வைத்துவிட்டுச் சென்றுள்ளார்.

இந்த நல்லகுணம் மனித நேயத்தை உயிர்ப்பூட்டுவதாக உள்ளது" என சமூக வலைதளத்தில், பலரும் பின்னூட்டல் மூலம் கொண்டாடி வருகின்றனர்.

# ஓமந்தூரார் தோட்டம் எம்எல்ஏ-க்கள் விடுதியில் பராமரிப்பு பணி டெண்டருக்கு தடை விதிக்க முடியாது: ஐகோர்ட் உத்தரவு



**சென்னை, மார்ச் 6:** ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் உள்ள சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கான விடுதியில் உள்ள அறைகளின் பராமரிப்புப் பணிகளுக்கு பொதுப்பணித் துறை டெண்டர்கோரியது.

கடந்த பிப்.28 அன்று கோரப்பட்ட இந்த டெண்டருக்கான படிவங்களை சமர்ப்பிக்க 2 நாட்கள் மட்டுமே அவகாசம் அளிக்கப்பட்டது. மேலும் டெண்டரில் பங்கேற்க விரும்பும் ஒப்பந்ததாரர்கள் பொதுப் பணித் துறை செயற்பொறியாளரிடம் தள ஆய்வு சான்றிதழ் பெற்று சமர்ப்பிக்கவும் அறிவுறுத்தப்பட்டது.

அதன்படி இந்த சான்றிதழ் வழங்கப்படாததால் டெண்டர் நடைமுறைகளுக்கு தடை கோரி ஒப்பந்ததாரர்கள் இருவர் சார்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது.

இந்த வழக்கு நீதிபதி எம். தண்டபாணி முன்பாக விசாரணைக்கு வந்தது. அப்போது, மனுதாரர்களுக்கு தள ஆய்வு சான்று வழங்கப்பட்டுவிட்டதாக அரசு கூடுதல் தலைமை வழக்கறிஞர் ஜெ.ரவீந்திரன் தெரிவித்தார்.

அதையேற்ற நீதிபதி, டெண்டர் நடவடிக்கைகளுக்கு தடை விதிக்க மறுத்து, டெண்டர் நடவடிக்கைகளைத் தொடர அனுமதியளித்து உத்தரவிட்டுள்ளார்.

# கோடை வெயிலுக்கு குட் பை..! ரெயில் பயணிகளுக்கு குளு குளு ஏ.சி. காத்திருப்பு அறைகள்



ரெயில் பயணிகளுக்கான அடிப்படையான வசதிகளை ரெயில் நிலையங்களில் தெற்கு ரெயில்வே மேம்படுத்தி வருகிறது.

பயணிகள் வருகை அதிகமாக உள்ள ரெயில் நிலையங்களில் பயணிகளுக்கான குளிர்சாதன வசதி மற்றும் குளிர்சாதன வசதி இல்லாத காத்திருப்போர் அறைகள் அமைக்கப்பட்டுள்ளன.

அந்த வகையில் சென்னை சென்ட்ரல், எழும்பூர், தாம்பரம், திருப்பூர், ஈரோடு, திருச்சி, ஸ்ரீரங்கம், காரைக்குடி, ராமேஸ்வரம், பழனி ஆகிய ரெயில் நிலையங்களில் ஏசி வசதியுடன் காத்திருப் அறைகள் பயன்பாட்டில் உள்ளன.

இந்தநிலையில் வெயிலின் தாக்கம் அதிகரிக்கும் என்பதால் மேலும் 30 ரெயில் நிலையங்களில் குளிர்சாதன வசதியுடன் காத்திருப்பு அறைகள் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து தெற்கு ரெயில்வே அதிகாரிகள் கூறியதாவது:-

பயணிகள் வருகை அதிகமாக உள்ள முக்கிய ரெயில் நிலையங்களில் பயணிகள் காத்திருப்பு, ஓய்வு அறைகள் உணவகங்கள் உள்ளிட்ட பல்வேறு வசதிகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றனர்.

கோடை வெயில் தாக்கம் அதிகரித்துள்ளதால் திருவாரூர், திருநெல்வேலி, திண்டுக்கல், சேலம், மயிலாடுதுறை உட்பட 30 ரெயில் நிலையங்களில் ஏசி வசதி கொண்ட காத்திருப்பு அறைகள் அமைக்கும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. பணிகள் முடிவடைந்ததும் பயன்பாட்டுக்கு திறக்கப்படும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

# திருச்சி ரெயில்வே நுழைவாயிலில் தமிழில் எழுதப்பட்ட இந்திப் பெயர் அகற்றம்




**திருச்சி, மார்ச் 6:** புதியதாக கட்டி முடிக்கப்பட்ட திருச்சி மண்டல ரெயில்வே அலுவலகத்தின் நுழைவு வாயிலுக்கு " கர்தவ்ய த்வார்" என தெற்கு ரெயில்வே இந்தியில் பெயர் வைத்துள்ளது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

"கர்தவ்ய த்வார்" என்றால் தமிழில் "கடமையின் நுழைவுவாயில்" என்று பொருள். தெற்கு ரெயில்வேவின் இந்த செயலுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி உள்ளிட்ட அரசியல் தலைவர்கள் கடும் கண்டனம் தெரிவித்தனர்.

இதையடுத்து திருச்சி மண்டல ரயில்வே மேலாளர் அலுவலக நுழைவு வாயிலில் தமிழில் எழுதப்பட்ட இந்திப் பெயர் அகற்றபட்டுள்ளது.

# ஓங்காளியம்மன் கோவில் திருவிழா

**சித்தோடு, மார்ச் 6:** பவானி அருகே காளிங்கராயன்பாளையம், வாய்க்கால்பாளையத்தில் மிகவும் பிரசிதிபெற்ற ஓங்காளியம்மன் கோவில் உள்ளது. இக்கோவிலில் ஆண்டு தோறும் மாசி மாதம் குண்டம் திருவிழா நடப்பது வழக்கம்.

அந்த வகையில், நடப்பாண்டு கடந்த 17-ல், பூச்சாட்டுதல் நிகழ்ச்சியும், நேற்று முன்தினம் காவேரி ஆற்றில் தீர்த்தம் எடுத்து வருதலும், பின்னர் இரவு குண்டத்திற்கு தீ மூட்டுதலும், நேற்று காலை, ஆற்றில் இருந்து அம்மன் அழைத்தலும், பின்னர் குண்டம் இறங்குதல் நிகழ்ச்சி நடந்தது.

இதில், ஆண், பெண்கள், என சுமார் ஐம்பதிற்கு மேற்பட்டோர் நீண்ட வரிசையில் வந்து நின்று குண்டம் இறங்கி நேர்த்திக்கடன் செலுத்தினர்.

அதனை தொடர்ந்து, பொங்கல் வைத்தல் நிகழ்ச்சியும், கும்பம் ஆற்றில் விடுதல் நிகழ்ச்சியும், மஞ்சள் நீராட்டு விழாவும், நாளை, சுவாமி மொரமணையுடன் பண்டிகை நிறைவடைகிறது.

# வேளச்சேரி - பரங்கிமலை இடையே பறக்கும் ரெயில் சோதனை ஓட்டம்

**சென்னை, மார்ச் 6:** சென்னை கடற்கரை- வேளச்சேரி இடையே பறக்கும் ரெயில் சேவை பொதுமக்களுக்கு பயனுள்ளதாக இருந்து வரும் நிலையில் அதனை பரங்கிமலை வரை நீட்டிப்பு செய்ய வேண்டும் என்று 2008-ம் ஆண்டு முடிவு செய்யப்பட்டு அறிவிக்கப்பட்டது.

பரங்கிமலை புறநகர் ரெயில் நிலையத்தோடு இணைக்கும் வகையில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டது. ஆனால் நிலம் கையகப்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் வேளச்சேரி பரங்கிமலை பறக்கும் ரெயில் திட்டம் காலதாமதம் ஆனது.

கோர்ட்டு வழக்குகளால் பணிகள் முடங்கிய நிலையில் கடந்த சில ஆண்டுகளாக விரைவுபடுத்தப்பட்டு தற்போது இறுதி கட்டத்தை நெருங்கியுள்ளது.

இத்திட்டம் தொடங்கி 17 ஆண்டுகள் ஆகியுள்ள நிலையில் ஒரு சில நாட்களில் இந்த வழித்தடத்தில் சேவையை தொடங்க தெற்கு ரெயில்வே முடிவு செய்துள்ளது. அனைத்து பணிகளும் நிறைவடைந்த நிலையில் இன்று அதிவேக சோதனை ஓட்டம் நடத்தப்படுகிறது.

வேளச்சேரி-பரங்கிமலை இடையான 5 கிலோ மீட்டர் தூரத்திற்கு சிறப்பு ரெயில் மூலம் இன்று மதியம் 2 மணி முதல் 5.30 மணி வரை இந்த சோதனை ஓட்டம் முதன்மை ரெயில்வே பாதுகாப்பு ஆணையர் தலைமையில் நடக்கிறது.

இந்த சோதனை ஓட்டத்தின்போது அனுமதி இல்லாத நபர்கள் யாரும் ரெயில் தண்டவாளங்களை நெருங்கவோ அதன் அருகில் வேலை செய்யவோ வேண்டாம் என தெற்கு ரெயில்வே அறிவித்துள்ளது.

# திருமணம் மீறிய உறவை கைவிட மறுத்த மனைவி குத்தி கொலை - பாலக்கோடு அருகே பரபரப்பு

**தர்மபுரி, மார்ச் 6:** தர்மபுரி மாவட்டம் பாலக்கோடு அடுத்த ஜெல்திம்மனூர் கிராமத்தை சேர்ந்த விவசாயி பாக்கியராஜ் (35) இவரது மனைவி நிவேதிதா (30) இவர்களுக்கு திருமணமாகி 12 வருடங்கள் ஆகிறது. 9 மற்றும் 7 வயதில் 2 ஆண் பிள்ளைகள் உள்ளனர்.

நிவேதிதாவிற்கு அப்பகுதியில் உள்ள வேறு ஒரு வாலிபருடன் திருமணத்தை மீறிய உறவு ஏற்பட்டுள்ளது. இதனையறிந்த பாக்கியராஜ் நிவேதிதாவை பலமுறை கண்டித்துள்ளார்.

ஆனால் தொடர்ந்து நிவேதிதா வாலிபருடன் பழகி வந்ததால் இருவருக்கும் அடிக்கடி தகராறு ஏற்பட்டு வந்தது. பெரியவர்கள் பல முறை நிவேதிதாவிற்கு அறிவுரை கூறி சமரசம் செய்து வைத்துள்ளனர்.

இந்நிலையில் நேற்றிரவு மீண்டும் கணவன் மனைவிக்கிடையே தகராறு ஏற்பட்டுள்ளது. வாய்தகராறு முற்றிய நிலையில் ஆத்திரமடைந்த பாக்கியராஜ் வீட்டில் காய்கறி வெட்டும் கத்தியால் நிவேதிதாவின் தொண்டை பகுதியில் குத்தி உள்ளார். இதில் நிவேதிதா துடிதுடித்து ரத்தம் வெள்ளத்தில் உயிரிழந்தார்.

நிவேதிதா இறந்ததை அறிந்த பாக்கியராஜ் தலைமறைவானார். இன்று காலை தகலவறிந்த பஞ்சப்பள்ளி போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று நிவேதிதாவின் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக தர்மபுரி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர்.

மேலும் இச்சம்பவம் குறித்து வழக்கு பதிவு செய்து போலீசார் பாக்கியராஜை கைது செய்து விசாரித்து வருகின்றனர். திருமணம் மீறிய உறவை கைவிடாததால் கணவனே மனைவியை குத்தி கொன்ற சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# கோவையில் ஜவுளி ஏற்றுமதி பாதிப்பு - செயற்கை நூலிழையின் விலை உயரும் அபாயம்



**கோவை, மார்ச் 6:** தொழில் நகரான கோவையில் இருந்து ஜவுளி, வெட்கிரைண்டர், மோட்டார் பம்ப், காய்கறிகள் உள்ளிட்ட பொருட்கள் வளைகுடா நாடுகளான குவைத், ஷார்ஜா, சவுதி அரேபியா உள்பட பல்வேறு வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது.

தற்போது ஈரான் மீது அமெரிக்கா, இஸ்ரேல் ஆகிய நாடுகளின் தாக்குதல், மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள அமெரிக்காவின் நிலைகளை குறிவைத்து ஈரான் தாக்குதல் நடத்தி வருகிறது.

போர் பதற்றம் காரணமாக பெரும்பாலான விமான சேவைகள் ரத்து செய்யப்பட்டுள்ளன. அத்துடன் செங்கடல் பகுதியில் நிலவும் பதற்றத்தால் சரக்கு கப்பல்கள் ஆங்காங்கே நிறுத்தப்பட்டுள்ளன.

இதனால் கோவையில் இருந்து மத்திய கிழக்கு மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் ஜவுளி, வெட்கிரைண்டர் தொழில் பாதிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள போர் பதற்றத்தால் ஹோர்முஸ் நீரிணையை ஈரான் மூடிவிட்டது. இந்த வழித்தடமானது எண்ணெய் போக்குவரத்து மட்டுமின்றி, வளைகுடா நாடுகளுக்கும், அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளுக்கு ஜவுளி உள்ளிட்ட பொருட்களை எடுத்தும் செல்லும் முக்கிய வழித்தடமாகவும் இருந்து வந்தது.

தற்போது இந்த வழித்தடம் மூடப்பட்டுள்ளதாலும், இந்த வழியாக சரக்கு போக்குவரத்து நடத்தப்படாது என முக்கிய சரக்கு போக்குவரத்து நிறுவனங்கள் அறிவித்துள்ளதாலும், நன்னம்பிக்கை முனை வழியாக ஆப்பிரிக்காவை சுற்றி செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் சரக்கு போக்குவரத்து 20 முதல் 25 நாட்கள் வரை தாமதமாகிறது என தென்னிந்திய பஞ்சாலைகள் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

ஹோர்முஸ் நீரிணை மூடப்பட்டுள்ளதால், நன்னம்பிக்கை முனை வழியாக ஆப்பிரிக்காவை சுற்றி செல்லும்போது தாமதம் ஏற்படுகிறது. இந்த தாமதத்தால் குறித்த நேரத்தில் வர்த்தகம் நடைபெறுவது தடைபடுகிறது. அத்துடன் போக்குவரத்து செலவு, ஆர்டர்கள் ரத்து, கட்டாயத் தள்ளுபடி விலைக்கு விற்க வேண்டிய நிலை போன்ற அபாயங்களும் ஏற்பட்டுள்ளது.

ஹோர்முஸ் நீரிணை மூடப்படுவதால் மூலப்பொருள் தட்டுப்பாடு ஏற்பட்டு செயற்கை நூலிழையின் விலை உயரும் அபாயம் ஏற்பட்டுள்ளது. ஐக்கிய அரபு அமீரகத்துக்கு ஆண்டு 2 பில்லியன் டாலர், வளைகுடா நாடுகளுக்கு ஒரு பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிலான ஆடைகள் ஏற்றுமதியாகின்றன. இந்த போர் பதற்றத்தால் ஏற்றுமதியில் சரிவு ஏற்படும் நிலை உருவாகி உள்ளது.

இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

இதே போன்று வெட்கிரண்டர் ஏற்றுமதியும் பாதிக்கப்பட்டுள்ளது. ஈரான்-அமெரிக்க போர் பதற்றத்தால் வெட்கிரைண்டர்கள் கொள்முதலை வியாபாரிகள் நிறுத்தி விட்டனர்.

இதுதொடர்பாக வெட்கிரைண்டர்கள் உற்பத்தியாளர்கள் சங்கத்தினர் கூறியதாவது:-

கோவையில் இருந்து மத்திய கிழக்கு நாடுகள், ஆப்பிரிக்க நாடுகள், ஐரோப்பிய நாடுகள், அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளுக்கு ஆண்டுதோறும் 10 ஆயிரம் கிரைண்டர்கள் ஏற்றுமதியாகின்றன.

மத்திய கிழக்கில் தற்போது நிலவும் போர் பதற்றத்தால் கடந்த சில நாட்களில் வெளிநாட்டு வர்த்தகர்கள் தங்களின் ஆர்டர்களை ரத்து செய்து விட்டனர். இதனால் ஏற்கனவே உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் அனுப்பப்படாமல் தேங்கியுள்ளன.


மத்திய கிழக்கு நாடுகளில் விற்பனைக்காக அனுப்பப்பட்ட ரூ.22 லட்சம் மதிப்பிலான 450 வெட் கிரைண்டர்கள், ஐக்கிய அரசு அமீரகத்தின் ஜபல் அலி துறைமுகத்தில் முடங்கியுள்ளது.

வாடிக்கையாளர்களிடம் இருந்து பொருளுக்கான பணம் கிடைப்பதிலும் தாமதம் ஏற்படுகிறது. ஏற்கனவே மூலப்பொருட்கள் விலை உயர்வால் வெட்கிரைண்டர் தயாரிப்பாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளோம்.

எனவே இந்த விவகாரத்தில் மத்திய அரசு உடனடியாக தலையிட்டு உற்பத்தியாளர்கள், வர்த்தகர்கள் பாதிக்கப்படாமல் இருக்கதேவையான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். போர் பதற்றத்தால் உயர்ந்துள்ள செலவினங்களை ஈடுகட்டும் வகையில் ஏற்றுமதிக்கான சலுகைகளை அறிவிக்க வேண்டும்.

இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

# செங்கரைப்பாளையத்தில் கண்ணாடி பயிற்சி



**ஈரோடு, மார்ச் 6:** ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி வட்டம், குளூர் ஊராட்சியைச் சேர்ந்த செங்கரைப்பாளையம் மனவளக்கலை மன்ற அறிவித்திருக்கோவிலில் அண்மையில் 3.3.26 செவ்வாய்க்கிழமை அதிகாலை 5.30-6.00 மணிக்கு கண்ணாடி பயிற்சி நடைபெற்றது.

பங்கு கொண்டோர்:-

வசந்தாமணி, ராஜலட்சுமி, சுமதி, பிரியதர்ஷினி, கிருஷ்ணன், மணி, சுந்தரமூர்த்தி, மணி, பேரா.பாலமுருகன். கண்ணாடி முன் அமர்ந்து, இயல்பான பார்வையாக நமது முழு உடலையும் கண்ணாடியில் பார்த்து, நமது உடலில் செலவாகும் ஜீவகாந்த சக்தியை உடலில் பெருக்கி, சக்தி திணிவை உண்டாக்க செய்யும் பயிற்சியே கண்ணாடி பயிற்சியாகும்.

செவ்வாய்க்கிழமை தோறும் அதிகாலை 5.30 மணிக்கு செங்கரைப்பாளையம் அறிவித்திருக்கோவில் நடைபெறுகிறது.

# ஈரான்- இஸ்ரேல் போர் எதிரொலி: பெட்ரோல், டீசல் நிரப்ப வாகனங்கள், கேன்களுடன் குவிந்தவர்களால் பரபரப்பு



**வாணியம்பாடி, மார்ச் 6:** ஈரான் மீது அமெரிக்கா-இஸ்ரேல் போர் தொடுத்ததால் ஈரான் பதிலடி தாக்குதல் நடத்தி வருகிறது. இந்த போர் காரணமாக கச்சா எண்ணெய் இறக்குமதி செய்வதில் சிக்கல் ஏற்பட்டால் இந்தியாவில் பெட்ரோல், டீசல் தட்டுப்பாடு ஏற்படும் என்றும், இதன் காரணமாக பெட்ரோல், டீசல் விலை கடுமையாக உயரும் என்றும் திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடி மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் சமூக வலைதளங்களில் வதந்திகள் பரவின.

இதனைத்தொடர்ந்து வாணியம்பாடி சுற்று வட்டார பகுதிகளில் உள்ள பெட்ரோல் நிலையங்களில் பெட்ரோல் மற்றும் டீசல் வாங்க ஏராளமானோர் அணிவகுத்து வந்தனர். பலர் கேன்களுடனும் குவிந்தனர். அவர்கள் வாணியம்பாடி பஸ் நிலையம், நியூ டவுன், பைபாஸ் சாலை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் உள்ள பெட்ரோல் நிலையங்களில் நீண்டநேரம் வரிசையில் நின்று கொண்டு பெட்ரோல் மற்றும் டீசலை தங்கள் வாகனங்களிலும், கேன்களிலும் நிரப்ப அலைமோதினர்.

இதனால் அனைத்து பெட்ரோல் நிலையங்களிலும் பதற்றமான சூழல் நிலவியது. பெட்ரோல் நிலைய ஊழியர்கள் இது வதந்தி என்று கூறி அவர்களை கட்டுப்படுத்த முயன்றபோது வாகன ஓட்டிகள் மற்றும் பொது மக்கள் அவர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

இதுபற்றி தகவல் அறிந்த நகர போலீசார் பெட்ரோல் நிலையங்களுக்கு விரைந்து வந்தனர். பெட்ரோல்-டீசல் விலை உயரும் என்பது வதந்தி என்று கூறி கூடியிருந்த அனைவரையும் கலைந்து போக செய்தனர். தொடர்ந்து பெட்ரோல் நிலையங்களில் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர். இந்த சம்பவங்கள் காரணமாக வாணியம்பாடி முழுவதும் பரபரப்பாக இருந்தது.

## அரசியல் கார்னர்

### “கல்வி உரிமையை பறித்தது காங்கிரஸ்; வேடிக்கை பார்த்தது திமுக” - சீமான் சீற்றம்



**சென்னை, மார்ச் 6:** ‘மாநிலத்துக்கான கல்வி உரிமையை பறித்தது காங்கிரஸ் கட்சி, அதை வேடிக்கை பார்த்தது திமுக. இவர்கள் மாநில உரிமையை பற்றி பேசுகின்றனர்” என்று சென்னையில் நடந்த பொதுக்கூட்டத்தில் அக்கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்துள்ளார்.

நாம் தமிழர் கட்சி சார்பில் ‘எது அரசியல்’ என்ற தலைப்பிலான பொதுக்கூட்டம், சைதாப்பேட்டையில் நேற்று நடைபெற்றது. கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில், சென்னை மாவட்ட சட்டப்பேரவை தொகுதி வேட்பாளர்கள் ஒரே மேடையில் அறிமுகம் செய்து வைக்கப்பட்டனர். பின்னர் சீமான் பேசியதாவது:

திமுக கூட்டணி பாஜகவை வரவிடக்கூடாது என்று சொல்கிறது. அதிமுகவோ திமுக ஆட்சிக்கே வரக்கூடாது, அதை ஒழிக்க வேண்டும் என்கிறது. இந்த கட்சிகளுக்கு கொடியில் வண்ணம் மாறும். ஆனால் எண்ணம் மாறாது. மாநிலத்துக்கான கல்வி உரிமையை எடுத்து சென்றது காங்கிரஸ் கட்சி. அதை வேடிக்கை பார்த்தது திமுக. இவர்கள் மாநில உரிமையை பற்றி பேசுகின்றனர். நாங்கள் இந்த இரண்டு கட்சிகளுமே வரக்கூடாது, ஒழித்துவிட வேண்டும் என்கிறோம். திருச்சி மாநாட்டில் 6 லட்சம் பேர் கூடினர். ஆனால் ஒரு சத்தம், கூச்சல் இல்லை. ஒரு நாற்காலி உடையவில்லை. அந்தளவுக்கு கட்டுகோப்பான படை எங்களுடையது.

எங்களுக்கு இருக்கும் நெருக்கடி போல் யாருக்கும் இருக்காது. போட்டியிடும் இடங்களில் பெரும்பான்மையாக இருக்கும் சமூகங்களுக்கும் இடங்கள் குறைந்துவிடக்கூடாது. நிராகரிக்கப்பட்ட, புறக்கணிக்கப்பட்ட சமூகத்தினரையும் அதில் விட்டுவிடக்கூடாது. மொத்தமாக 117 தொகுதிகளை பெண்களுக்கு கொடுக்கவேண்டும். அதுவும் படித்த, அரசியல் தெரிந்த, சமூக பிரதிநிதித்துவதுடன் அவர்கள் இருக்க வேண்டும். இதனால் அவர்களை தேர்ந்தெடுக்க கடந்த ஓராண்டாக தலையில் நெருப்பை கொட்டியது போல் சுற்றி வந்தேன். ஆதிதமிழ்க்குடிக்கு 4 பொதுத்தொகுதி, தேவேந்திரருக்கு 2 பொதுத்தொகுதி, பழங்குடியினருக்கு ஒரு பொதுத்தொகுதி இந்த தேர்தலில் வழங்கியிருக்கிறோம். இவ்வாறு அவர் பேசினார்.

### #Sengottaiyan ஜெயக்குமார் வேண்டுமானால் த.வெ.க.விற்கு வரலாம் - செங்கோட்டையன்



**கோபி, மார்ச் 6:** ஈரோடு மாவட்டம் கோபி பஸ் நிலையத்தில் இன்று த.வெ.க. தேர்தல் பிரசாரம் வாகனம் தொடக்க நிகழ்ச்சி நடைபெற்றது.

த.வெ.க நிர்வாககுழு தலைமை ஒருங்கிணைப்பாளர் செங்கோட்டையன், நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பிரசார வாகனத்தை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

பின்னர் செங்கோட்டையன் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:-

த.வெ.க. சார்பாக இன்று முதல்கட்டமாக ஈரோடு சட்டமன்ற தொகுதியில் பல்வேறு இடங்களில் பிரசார வாகனம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது

குறிப்பாக கோபிச்செட்டிப்பாளையத்தில் பிரசாரம் வாகனம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

புதிதாக விசில் சின்னத்தை அனைவரும் தெரிந்து கொள்ளும் அளவிற்கு கிராம மக்கள் இடையே கொண்டு செல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பொதுக்குழு கூட்டத்தில் விசில் சின்னத்தை விஜய் அறிமுகம் செய்தார்.

இளைஞர்கள், பெண்கள் என அனைவரும் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

நமது வாக்கு ஜனநாயகத்தை காக்குகின்ற வாக்கு. அதை வீணடிக்காமல் தி.மு.க.வை வீழ்த்த வாக்கு அளியுங்கள்.

தேர்தல் களத்தில் தி.மு.க.வினர் கவர்ச்சிகரமான திட்டங்களை கூறி மக்களை ஏமாற்றி வருகின்றனர். 3000 கொடுக்கப்படும் என தெரிவித்துள்ளனர். அதுவும் ஏமாற்று வேலை தான்.

தொடர்ந்து காங்கிரஸ் என்றைக்குமே தி.மு.க.வுடன் தான் கூட்டணியில் உள்ளது.

எங்களிடத்தில்(த.வெ.க) வந்துவிடுவோம் என கூறி தி.மு.க.விடம் கூடுதல் சீட்டை காங்கிரஸ் பெற்றுள்ளது.

முன்னாள் அ.தி.மு.க., அமைச்சர் ஜெயக்குமார் வேண்டுமானால் த.வெ.க.விற்கு வரலாம். அவருக்கு இந்த முறை அ.தி.மு.க.வில் சீட் கிடைக்காது.

கூட்டணிக்கு வருகின்றவர்களை வரவேற்போம் முதலில் அவர் (ஜெயக்குமார்) வருகிறேன் என கூறட்டும். அதன் பிறகு சேர்ப்பது குறித்து பார்க்கலாம். புகழேந்தி என்னுடைய நண்பர் அல்ல அவருக்கு பல நண்பர், என்றார்.

Published by R.S ROSHINE Printed by R.S. ROSHINE On behalf of R.S. ROSHINE Printed at J.M. Process, No 29, V.N. Doss Road, BorderThottam, Mount Road, Chennai – 600002.
and Published From NO. 42/62, Buchammal Street, 1st Floor, New Washermenpet, Tondiarpet, Chennai, Tamilnadu – 600081. Editor: R.S.ROSHINE, PH: 8122836299, e-mail: paperboynewspaper@gmail.com